1825

உ

கடவுள் துணை.

மதுரைவீரய்யன் நாடகம்.

கடலூர் புஸ்தக வியாபாரம்
ம. தி. முருகேச முதலியாரால்,
சென்னை
வாணி விலாசம் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.

[...] 1928 [அணா 5.

ரிஜிஸ்டர் காபிரைட்.

19 SEP
10 SEP 192
MADRAS
C-,2mkP, M
1128

உ

கடவுள் துணை.

மதுரைவீரய்யன் நாடகம்.

சுத்தப் பதிப்பு.

இவை,

சாலை. கிருஷ்ணப்பிள்ளை

இயற்றியது.

சாத்தகுப்பம்

வரத உபாத்தியாயர்

ஏட்டுப்பிரிதியைகொண்டு எழுதியது.

இவை

கூடலூர். கு. வை. வீரப்பபடையாச்சியாரிடம்

சகல சுதந்தரமும் பெற்றுக்கொண்டு,

கூடலூர் புஸ்தக வியாபாரம்

ம. தி. முருகேச முதலியாரால்,

சென்னை

வாணீ விலாசம் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1927. [அணா-5.

ரிஜிஸ்டர் காபிரைட்.

OFFICE OF THE REGISTRAR
No.
19 SEP 1928
MADRAS

உ

கடவுள் துணை.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில் கூடலூர் புஸ்தகவியாபாரம் ம. தி. முருகேச முதலியார் அவர்களால் மதுரைவீரய்யன் நாடகத்தை அனுசரித்து சகலசுதந்தரமும்பெற்றுக்கொண்டு அச்சிட்டிருப்பதால் இந்தநாடகத்தை யாதாமொருவர் அச்சிடுவார்களாகில் 1867-வது வருஷம் 25-வது ஆக்டின் 20-வது பிரிவு 6-வது விதியின்படி (ரிஜிஸ்டர் காப்பிரைட்) பெற்றிருக்கிறபடியால் இதை அச்சுக்கூடத் தலைவரும் மற்றெவர்களும் அடியில் கண்டிருக்கிற என்னுடைய அனுமதியின்றி அச்சிடப் படாது வேறு பாஷையிலும் மொழி பெயர்த்தும் அச்சிடப்படாது அப்படி சட்டத்திற்கு விரோதமாகச்செய்வார்களாகில் அதனால் நேரிடும் நஷ்டத்தையும் கொடுப்பதன்றி கோர்ட்டின் மூலமாய் தண்டனைக்குள்ளாவார்கள்.

இப்படிக்கு,

ம. தி. முருகேச முதலியார்

புஸ்தகவியாபாரம், கூடலூர்.

உ

கடவுள் துணை.

மதுரைவீரய்யன் நாடகம்.

காப்பு.

துதியும்வீரமுஞ் சொல்லும்நற்கீர்த்தியும்
அதிகவித்தையு மாண்மையுந்தானுலும்
மதுரைவீரய்யன்றன் நாடகம்வாழ்த்திட
கதிர்கொள்சித்தி விநாயகன்காப்பரோ.

காசிராஜன் கவி:

அர்த்தனார்விஸ்வநாதர் அடியிணைப்பாதம்போற்றி
மெத்தவேபணிகள்பூண்டு மேன்மையாய்க்கிரீடந்தன்ன
உத்தமமந்திரிமார்கள் உபற்கவிவாணர்சூழ
மெத்தவேகாசிமன்னன் மேன்மையாய்வருகின்றாரே.

தரு.

ராசாதிராசன் மகாராசன் காசிபூபதி
ராசன்கொலுவதாகினார் வெகுவேடிக்கையாக
ராசன்கொலுவதாகினார்

தேசமன்னருங் கவிராசராசர்கள்சூழ
போசனெனும்விஸ்வாசன் தாசாடியில்தாழ
(சுருள்) பொங்கியில்மன மகிக்ஷியாகவே
சிந்தையில்மிக களிப்பதாகவே (ராசா)

சென்னியில்முடியிலங்க உன்னிதப்பணிதுலங்க
கன்னியரும்வணங்க மன்னருமிகக்கலங்க
(சுருள்) கவரிக்ஷாமரை யெவரும்வீசிட
தவறில்லாதமன் னவர்கள்பேசிட (ராசா)

தாளமத்தளவோசை சல்லரிமுரசபாட
மேளமுரசுபேரி மிக்கவாத்தியத்தியத்துடன்

(சுருள்) மிகசெம்தரிகிட தகதரிகிடவென
தகதிமியெனவொடு தளங்குதோமென (ராசா)

அத்தனுர்விஸ்வலிங்கற் அம்மைவிசாலாக்ஷிபாதம்
மெத்தவேதுதிசெய்து பத்தியுடனேநீதம்

(சுருள்) மேன்மைகொண்டிடும் மன்னர்கள்போற்ற
தாண்மையில்லாமலே திருவடிசாற்ற (ராசா)

கவி.

ராசமன்னவர்கள்போற்ற நான்மறையோர்கள்வாழ்த்த
தேசமன்னவர்கள்சூழ தினந்தினம்பரமன்பாதம்
நேசமாய்மந்திரிமார்கள் நின்றுகைகரங்குவிக்க
வாசவன்களிக்ககாசி மன்னனும்கொலுவிருந்தான்.

வேறு கவி.

சுருதியாய்கவிபுணர்ந்த சுந்திரமந்திரிகேளாய்
பருதிபோல்வாணற்சூழ பாவையற்பாடியாட
திருதியெனதுதேவி செண்பகவதியாள்தன்னை
கருதிநான் அழைத்தேனென்று கடுகெனவறச்செய்வீரே:

செண்பகவதி கவி.

சந்தணக்களபம்பூசி சரிகையும்சேலைமின்ன
விந்தையாய்ஒட்டியாணம்பூட்டி வெகுபணியலங்கரித்து
கந்தமுமலறணிந்து கணவரைக்காணவேண்டி
சிந்தையுங்களிக்கசெண்பகம் சேயிழைவருகின்றாளே.

தரு.

வந்தாள்செண்பகவல்லிமாது மிகவொயிலாள்
வாராள்செண்பகவல்லிமாது

வந்தாள்செண்பகவல்லி மன்னன் தன்னையேகாண

(சுருள்) மங்களமாகவே இங்கிர்தமுடன்வெகு
சங்கையில்லாமலே சரியாய்சபைதனில் (வந்தா)

நெத்தியில்திலர்தமின்ன
பத்தியுடன்பாவையாள்
(சுருள்) பாசமதாகவே
நேசமுங்கண்டிட

நேர்விழிக்கிமையெழுதி
பைங்கிளிநடைநடந்து
ஆசைநாயகனை
வீசும்பிரதாபனை (வந்தா)

கந்தங்கதம்பம்பூசி
விந்தையுடன்விஸ்வாசி
(சுருள்) வேல்விழியாள்வயர்
நூலிடைமேனியும்

கன்னிகயிலாப்பேசி
வேடிக்கையாகைவீசி
ஆலிலைப்போல
சாலவேமேல (வந்தா)

அரிகினில்தாதியர்கள்
சுரிகுழல்மாதர்தினம்
(சருள்) தொந்தோமெனதிக
வந்தேயென்றுமே

அன்பாகவரிவீச
சுத்திவந்துமேபேச
நாதரிதாமென
செம்தரிதாவென (வந்தாள்)

செண்பகவதி கவி.

சிந்தையுமனங்களிக்க செண்பகவல்லிமாது
வந்துமேபெரியோர்பாதம் மலரடிபோற்றிசெய்து
அந்தமாம்தனதுமன்னன் அவரடிபணிந்துபோற்ற
கந்தநற்குழலாள்மாது கணவனைதுதிக்கின்றாளே.

தரு.

சருணம்சருணம்நாதனே
கருணைவையும்நீர்வேதனே

கிருபைவைத்து

ஒருமையாயிருவரும் வருமையகற்றிவாழ்ந்து
அருமையாய்சபைதனில் அழைத்தவிதமருளும் (சரு)

காசிராஜன் தரு.

பாசமிகுந்ததேவியே யெனதுபிராண
ஆசைபூண்டிடும்ஆவியே

ஓசையுடனேயுன்னே உண்மையாஅழைத்தது
தேசப்புகழுமானே தெரிவிக்ககேள்தேனே (பாச)

செண்பகவதி தரு.

யெந்தவிதமோஅரியேன் யெனையழைத்த
தேதுவிதமோதெரியேன்

சுந்தமலரணியும் சுந்திரதீரனே
அந்தவிதமெனக்கு அரிந்திடமானே (யெந்த)

காசிராஜன் தரு.

யென்னநான்செய்வேன்பெண்மணி யெனக்குமனம்
இருந்திருந்தேங்குதென்மணி

அன்னவன்செயலேதோ அரிவையேயெனக்குரைக்க
வின்னம்வந்துசேருமடி மெல்லியரேவல்லியரே (யென்ன)

செண்பகவதி தரு.

தேனேயென்திரவியமே யெனதுபிராண
கோனேநீஅருளுஞ்சீமானே
மானுர்மடக்கொடிக்கி மயக்கமில்லாமல்நீயே
வானோர்புகழ்ந்திடவே வண்மையுரைத்திடாயே (தேனே)

காசிராஜன் தரு.

விஸ்வநாதர்அருளிருக்க மெல்லியேமானே
வேண்டுந்திரவியமிருக்க
அசையாபொருள்நமக்கு ஆஸ்தியெல்லாமிருக்க
அருமையாஒருசுதன் பெருமையில்லடிதேனே (விஸ்வ)

செண்பகவதி கவி.

பரமனாருளிருக்க பாக்கியம்வேணதிருக்க
அருமையென்பிராணநாதா அன்புடன்ஒன்றுரைப்பேன்

வருமைமையை அகற்றிபின்னும் மலாடிபோற்றிசெய்தால்
திருவருளால்சந்தானம் செல்வனும்தருகுவாரே.

காசிராஜன் கவி.

அப்படியல்லமானே அவாருளிருந்தால்போதும்
ஒப்பறவாகநாமும் உச்சிதமனைவிட்டு
யெப்படிசெய்யவேணும் யேந்திழையாளேசொன்னால்
சற்பிணிகாசிஉன்சொல்போல் காவலன்நடப்பேனனே.

செண்பகவதி தரு.

காசிநகர்தன்னையாளு மன்னுமன்னு இந்த
கன்னியுரைக்குசேதி முன்னேமுன்னே
காரணகாரியங்கள் பூரணமாயுரைப்பேன்
தேருதலாகச்சொல்லி செல்வன்பிரக்கநல்லி (காசி)

காசிராஜன் தரு.

தேசும்பிரகாசமுள்ள மானேதேனே நீ
தெரியவுரையெனக்கு தானேமானே
மீசனருள்நமக்கு யென்றுமிருப்பதாலே
பாசமுடனரிய பரிவாயுரைப்பாய்மேலே (தேசும்)

செண்பகவதி கவி.

ஆசையுமன்புமுள்ள அண்ணலேபிராணநாதா
பேசவேயுரைக்ககேளும் பெண்மயிலானவார்த்தை
நேசித்துவிஸ்வநாதர் நின்றிடவெள்ளிதன்னால்
போசனேரிஷபஞ்செய்தால் புத்திரன்நமக்குண்டாமே.

காசிராஜன் கவி.

புத்திரன்வாஞ்சையி... புகழ்பெறதீறவேண்டி
அத்தியையுரித்த தானை அரனருள்பெற்றுநாமும்
சித்திரமுமி...ளே செய்திட அன்னதானம்
பத்தியாய்சாமூதுபோற்ற பாவையேசெல்வோம்வாருய்.

காசிராஜன் தேவாரம்.

ஆதியேஅரனேபோற்றி அம்பிகைபாகாபோற்றி
மேதினில்மதனோதன்னை விருந்துண்டதேவாபோற்றி

நீதியாயுலகமாள நின்சுதன்வேண்டிவந்தேன்
பாதியின்மதியைசூடும் பரமனேபோற்றியோற்றி,

செண்பகவதி தேவாரம்.

காமனையெரித்தாய்போற்றி கரியுரிதரித்தாய்போற்றி
சோமனை திருக்கண்கொண்ட சுந்திரநாதாபோற்றி
நேமமாபுதல்வன்வேண்டி நின்னருள்தபத்தில்தானே
க்ஷேமமா அருள்தந்தாலும் செஞ்சடைநாதாபோற்றி.

காசிராஜன் தரு.

மன்னர்மெச்சவாழ்ந்திருந்தேன் — அண்ணலாரே
சிவனே — அண்ணலாரே
யென் மனதினில்கவலைகொண்டேன் — அண்ணலாரே
யென்னசொல்வேன்கொடுமைதன்னை — அண்ணலாரே
சிவனே — அண்ணலாரே
யேங்கிமனங்தேங்கலானேன் — அண்ணலாரே

செண்பக்வதி தரு.

இன்னகரில்வாழ்ந்திருந்து — அண்ணலாரே
சிவனே — அண்ணலாரே
இருவரும்வைபோகம்பெற்றோம் — அண்ணலாரே
கன்னிகானிதுவரையில் — அண்ணலாரே
சிவனே — அண்ணலாரே
காண்கிலேன் ஒருசுகமும் — அண்ணலாரே

காசிராஜன் தரு.

மைந்தனில்லாஉண்ணுஞ்சாதம் — அண்ணலாரே
சிவனே — அண்ணலாரே
மருந்தென் றுலகில்சொல்வார் — அண்ணலாரே
யெந்தன்மனஸ்தாபமகூ — அண்ணலாரே
சிவனே — அண்ணலாரே
இட்சணம்நீர் தீர்க்கவேணும் — அண்ணலாரே

செண்பகவதி தரு.

சிந்தைகலிதீர்த்திடவே — அண்ணலாரே
சிவனே — அண்ணலாரே
ஒருசெல்வன் அளிக்கவேண்டும் — அண்ணலாரே
யெந்தகாலமெதிர்வருவீர் — அண்ணலாரே
சிவனே — அண்ணலாரே
யெனக்குவருமைதீரும் — அண்ணலாரே

காசிராஜன் தேவாரம்.

கஞ்சிகாமாக்ஷிநீலி கர்த்தனே அரனேபோற்றி
உன்செயலாலே அன்றி ஒருவரும் துணைவேறில்லை
தஞ்சமென்றடியைவாழ்த்தி தபபுத்திரன்வேண்டியின்று
வஞ்சமில்லாமல்வந்தேன் வரமெனக்கருள்வாய்போற்றி.

செண்பகவதி தேவாரம்.

மங்களகல்யாணிநீலி மயேசசெஞ்சடையாய்போற்றி
தங்கியபெண்களுக்கு தபப்பலனென்றில்லாமல்
சங்கையில்லாமல்வந்தேன் சந்தானமருள்பெற்றேங்க
ளெங்களுக்கருள்புரிந்து யீசனேவருவாய்போற்றி.

காசிராஜன் செண்பகவதி தரு.

சப்போசங்கராலிங்கா	அரோகரா
சர்வப்பரிபூரணா	அரோகரா
நந்திவாகனலிங்கா	அரோகரா
நாதாதிவ்வியபாதனே	அரோகரா

காசிராஜன் கவி.

இப்படிசிலதுநாளும் யீசனை துதித்துப்போற்றி
கற்பனைபடிநடக்க காசிபூபதியும் அன்னாளில்
சொர்ப்படிவிஸ்வேசர்க்கு தோன்றியரிஷபம்செய்து-
பற்பலதொண்டுவேலை பாங்குடன்செய்யலுற்றார்.

பொது வசனம்.

இவ்விதமாக காசிராஜனும் செண்பகவதியும் வெள்ளியினால் ரிஷபம் செய்வித்து அம்மன்யெதிரில் பொர்க்கோபுரங்கட்டி வைத்து வேண்டியபாங்களுக்கு அன்னதானமிட்டநாளில் காசிராஜனை காணும்படி பரமசிவன் வருகின்றார்.

பரமசிவன் கவி.

புத்திரன்சுபேட்சையாலே பூபனுங்காசிமன்னன்
மெத்தவேமன துநொந்து வெள்ளியங்கிரியில்வாழும்
அர்த்தனர்பாதம்போற்றி அருந்தபஞ்செய்யும்போது
சத்தியுமுடனேசாம்ப சிவனுமேவருகின்றாரே.

தரு.

சாம்பசிவசங்கரர்வந்தார் விடையிலேறி
சாம்பசிவசங்கரர்வந்தார்

பாம்புடன் அருகுதும்பை பாதிமதியுந்தரித்து
தாம்பில்குண்டலமுடன் சத்தியும்சிவனுமாக (சாம்ப)

சென்னியில்சடாமகுடமும் இருகரத்தில்
வன்னிமான்பழுவுஞ்சூலமும்

கன்னியர்கூதாமரைவீச காளைமேலேறிஉல்லாச
மண்ணுலகில்தபஞ்செய்யும் மன்னன்காசிராசன்முன்னே (சா)

அந்திரதுந்தமிமுழங்க செயசெயவென்று
இந்திரதேவர்கள்வழங்க

மந்திரமறையோர்கள்பாட மாமுனியோர்கள்நாட
சுந்திரகின்னரர்கூட சொருசாய்வேதங்கள்பாட (சாம்ப)

போற்றிசெய்திமையோர்வணங்க இருபுறமும்
கார்த்திடவேபூதகணங்கள்

ஆத்திமரைச்சூடி அன்புடன்தபத்தைநாடி
போற்றிசெய்காசிராஜன் புத்திரக்கலிதீர்க்கத்தேடி (சாம்ப)

பரமசிவன் கவி.

வந்தடிபணிந்துநின்ற வண்மைசேர்நந்திகேளாய்
சிந்தையில்மகிழ்ச்சிகூர்ந்து தேவிபார்வதியாளோடு
அந்தமாஉலகோருக்கும் அனைவர்க்கும்காக்ஷிதந்து
குந்தகமில்லாவந்தோ காசிகொற்றவர்க்குறைசெய்வாயே.

காசிராஜன் கவி.

வாராய்நீமந்திரிமாரே மனக்குறையகற்றவேண்டி
தீராதவினையகற்றும் சிவபெருமானும்வந்தார்
கூராதமொழியுரைத்து கொற்றவர்பதம்புரிந்து
நேரரகபுத்திரபாக்கியம் நேசித்துவருகலாமே.

காசிராஜன் சருணம் தரு.

சாம்பசிவனேவுந்தன் தாளடிபணிந்தேனைய்யா
பாம்பணிந்தமார்பனே பரனேகாக்ஷித்தாளைய்யா
கொன்றைசூடியநாதா குறைதனையகற்றும்பாதா
அன்றுவேதமுடிவில் அருள்கொடுத்திடும்வேதா
அம்மைசிவகாமிக்கு அருளிடப்பாகந்தந்தாய்
உம்மால்அருள்கொடுகக உகந்துயென்னிடம்வந்தாய்
கொன்றைதும்பையருகுகொண்டு வந்தேன்பாதத்தில்
இன்றுநான்அர்ச்சித்தேனே இறைபவானுன்தினத்தில் (சாம்)

காசிராஜன் தோச்சகம்;

அன்றுநீதேவர்க்கிடர் அருளதுவேதான்கொடுத்து
கொன்றைதும்பைமேலணியும் கொத்தவரேயுன்பதத்தில்
வண்டுளபமார்பணியும் மாயனுக்குமைத்துனரே
நின்றிடவேபதம்பணிந்தேன் நித்தனேவுன்தாள்போற்றி.

பரமசிவன் கவி.

நின்றிடும்அரசன்முன்னே நித்தனுமனமகிழ்ந்து
நன்றெனமனதில்கோரி நம்மைநீநினைத்ததென்ன
இன்றெனதவத்தைச்செய்தாய் இறையவாநீடுழிவாழி
கொன்றைசூடியனார்வந்தேன் குறையைநீசொல்லுவாயே.

காசிராஜன் தரு:

சாம்பசிவனேவுந்தன் தாள்பணிந்தேனைய்யா
தாள்பணிந் தேன்
சஞ்சலமனதில்வைத்து நான்கனிந்தேன்
தர்ம்பில்லாதன்மைபோல கதறலானேனைய்யா
கதறலா னேன்
ஒருதனையனைவேண்டிவந்து சிதறலானேன்
(சுருள்) தையல்பார்வதிக்கிடமுந் தந்தவா
மெய்யாவுன்பதம்கனிந்து முந்திவா (சாம்ப)

பரமசிவன் தரு.

ஆசையுடனேஇன்னிலத்தை யாளுமன்னா
நீ ஆளு மன்னா
வென்அடிபணிந்தவிதத்தை கேளுமுன்னே
நேசித்துன்மனைவியோடு இருந்ததென்னா
அப்பாயிருந்த தென்னா
கெடியப்பதம்பணிந்த விதமுமென்னா
(சுருள்) நிகழ்த்துவாயதை புகட்சியரிந்திட
செகத்தினிலதையான் மகிழ்ந்திட (ஆசை)

காசிராஜன் தரு.

அந்தநாளாய்இந்தநாளாய் சிவனாரே
சாம்ப சிவனாரே
ஆண்டுவந்தேன்காசிநகற் சிவனாரே
எந்தன்தபக்குறைதீர பரமனாரே
அய்யா பரமனாரே
இல்லையேசந்தானமொன்று பரமனாரே
(சுருள்) பிச்சைக்கொள்ளவே பக்ஷம்வல்லையே
தக்ஷணமதைதாருக் தொல்லையே (அந்த)

பரமசிவன் தரு.

உச்சிதவசனஞ்சொல்லும் ராசமன்னா
ஒகேச ராசமன்னா
உலகமதையாண்டுவந்த நீதியென்னா

யிச்சமையம்சுதனேவேண்டி வந்தமன்னு
நீவந்த மன்னு
இப்பவுய்வரமளித்தேன் யேகும்யென்னுல்
(சுருள்) இந்திரர்முதல் அந்திரம்பூமியும்
சந்திரர்அரிய சாக்ஷியாசொன்னேன் (உச்சித)

காசிராஜன் கவி.

இரையவாயுந்தன்வரக்கு யிடரதுவந்திடாமல்
தரைபுகழனத்துமெச்ச தனையனையின்றெடுத்து
நரைதிரைமூப்புந்தீர்ந்து நர்ச்சுகம்பெறவேவேண்டும்
குரைவரு அருள்பாலிக்க கொற்றவாசருணம்போற்றி.

பரமசிவன் கவி.

இப்படிவரங்கள்யாவும் என்னைநீகேட்டமன்னு
அப்பணிசடையோனுன அரனுமேவரமளித்தேன்
நர்ப்படிஓர்சுதனைப்பெற்று நாளுமேவாழ்வாய்நீயே
செப்பமாசுதனுண்டாக திருவருள்புரிந்திட்டேனே

காசிராஜன் கவி.

நற்றவம்புரிந்தகாசி ராசனுமனமகிழ்ந்து
கர்த்தனும்உமையாளோடு கையிலயங்கிரியில்செல்ல
மற்றமன்னவர்கள்சூழ மன்னனும்மனம்புரிந்து
வெற்றியாயறன்மனைக்கி வேந்தனும்நடந்திட்டானே

பொது வசனம்.

இவ்விதமாக காசிராசன் பரமசிவனுல் வறம்பெற்று தேவியும் கூட அரண்மனைக்கிசென்றிருக்க இப்பால் பத்துமாதமுஞ் சென்று செண்பகவதிக்கு பூரணகெற்பமாகி கெற்பவேதனைப்படுவது,

செண்பகவதி கவி.

பூரணகெற்பமாகி பொர்க்கொடிவயருந்நொந்து
பாரினிலெவர்க்குமுள்ளப் படியதாய்சோபமாகி
சிரணிமாதற்பக்கல் சென்றுமேகையால்தாங்க
கூர்விழிநீர்கள்சிந்த கோதையும்புலம்புவாளே.

தரு,

அம்மம்மாயென்னசெய்வேன் தோழிமாரே-என்
அடிவயத்தைஉலேக்குதடி யென்னசெய்வேன்
விம்மிவிம்மிவயரு வலிக்குதடி-யெந்தன்
மேனியெல்லாம் வேர்வைசொரியுதடி
யென்னசெய்வேன்தாதிமாரே யேதுசெய்வேன்
யேங்குதடியெந்தன்மனம் பாங்கிமாரே
யெந்தனில்லையென்றுமனம் வாடினேன்தேன்-அந்த
மனவருத்தமெல்லாமிப்வோ தோற்றுதடி
ஆயிரந்தேள்கொட்டினதுப்போல் பாங்கிமாரே-எனக்கு
அங்கமெல்லாமிப்போது நோகுதடி
அன்னையரேவிசாலாக்ஷி யெந்தன்தாயே-இனி
ஆதரித்துஎந்தனையும் காப்பாய்நீயே-அம்மம்மா

கவி.

யென்னடிபாட்டிகேளாய் என்னிடதிரேகமெல்லாம்
பின்னமாநோகுதெந்தன் பிராணனும்போகுதம்மா
மன்னியயெனதுகெற்ப வாதையும்நீக்கியேயும்
அன்னைபோல்வேதைதன்னை அகற்றுவீர்அம்மமாரே

தரு.

அம்மாநான்யென்னசெய்குவேன் யெனதுபாட்டி
தாயேநானென்னசெய்குவேன்

அம்மாநானென்செய்வேன் அதிகமானேருதே
ஆவிப்போகுதெனக்கு அய்யய்யோஎன்செய்வேன் (அம்மா)

பாங்கிநானென்செய்குவேன் பாட்டியேநீதான்
பக்கமிருந்துகாரம்மா

பாங்கியேயென்செய்வேன் ஆங்காரமுங்குன்றி
பங்கப்படுத்துதடி பரிபாசம்போலவே (அம்மா)

செண்பகவதி கவி.

தண்மையில்லாதமாது தனித்திடபும்பிவாடி.
உண்மையாயாங்கிகூடி ஒருமித்துயிருக்கனடி
பண்புடன்உலகமெச்ச பாலசூரியனைப்போல
வண்மையாமாலைசுற்றி மைந்தனுஉதித்திட்டானே.

தரு.

வீராதிவீரன்பிறந்தான் காசிராசற்கு
வேந்தன் குலம்விளங்கவே
வாருதிசூழுங்காசிமாநகர் தன்னிலேதான்
பாருலகாளும் காசிராசன்மனமகிழ (வீராதி)
மாதர்க்கரசியென்னும் மகாசெண்பகவதி
மாணிக்கம்போல்வயற்றில் மாநிலமாள்வதற்கு (வீராதி)

செண்பகவதி கவி.

அருவைதாதியரேவாடி அழகுள்ளபாலனுக்கு
தெருவையாள்அனவோர்கூடி சிங்காரதொட்டிலாட்டி
ஒருமையாமனங்களித்தோம் ஓடியென்னரசருக்கு
வருமையைஅகற்றமைந்தன் வந்தனன்உரைத்திடீரே.

காசிராஜன் கவி.

தாதியருரைக்ககேட்டு சந்தோஷமனமகிழ்ந்து
வேதியருடனேசொல்லி விரவினிலழைப்பீரென்று
காதலால்கட்டியக்காரு கடிகியேஓடிநீங்கள்
சோதிடர்தன்னையிங்கு சுருக்கினிலழைத்திடாயே

சோசிய பிராமணன் கவி.

வருகுவிரென்றவார்த்தை மாமறையோருங்கேட்டு
அருமறைவேதசாஸ்த்திரம் ஆராய்ந்துணரும்வல்லோர்
பெருக்கவேகாசிமன்னன் பிரபலன்சமுகமதனுடி
சுருக்குடன்னெழுந்திருந்து சோசியர்வருகின்றாரே.

தரு.

சோசியர்வந்தாரே ராசன்முன்னே (சோசி)

சோசியர்வந்தாரே சுபவாக்குதந்தாரே
விசிடவேநல்ல ராசியறிந்திட (சோசி)

நெற்றியில்வெண்ணீரும் கீருசந்தனமும்
நேராவிளங்கிட வீரன்சபைதனில் (சோசி)

வெற்றிப்பெற்றிடும் காசிமன்னனுக்கு
புத்திரன்உதிக்கவே பூரணமரிய (சோசி)

பட்டுடன்வேஷ்டியும் பாதக்குரடுடன்
மேட்டிமையாகவே வீதியில்நடந்துமே (சோசி)

காசிராஜன் கவி.

துதிபெரும்பிராமணரே சொல்லக்கேளும்
சுந்திரனார்அருள்படிக்கு பிறந்தபிள்ளை
விதிப்படிக்கிநூலரிந்து யுரைக்கவேண்டும்
வேதியரேஉங்களிட கிருபையாலே
ஆதிமறைதன்னையும் நீராய்ந்துபார்த்து
அதின்பலனை ஒளியாமல் பலனைக்சொன்னால்
போதுமானபொருளதுவும் தருவேனையா
புந்தியினால்உந்தனுக்குப் போற்றினேனே.

பிராமணன் கவி.

உரைப்பேனன்கேளும் உத்தமமன்னா
தரைபுகழாள் தனையர்க்குசாதகம்
அரையவேபார்க்க ஆருடமும்யான்
நிரைந்திடயானும் நிகழ்த்திடதானே.

பிராமணன்-ரூபகம்.

பார்த்துரைக்ககேளுமன்னா பாரினில்கீர்த்திதாங்கும்
நேர்த்தியுடன்நானுரைப்பேன் நிபுணனேகாசிராஜே

அருந்தபபலத்தினாலே அழகுள்ளசுதன்பிறந்தான்
பொருந்திடஇலக்குணங்கள் பிழையொன்றிருக்குதப்பா

யென்னவென்றுகேட்டதாலே இருக்குதப்பா அதிலோர்குற்றம்
அன்னவன்விதிப்படியே அளித்தபின்னெழுதிலையாலே
மாலைசுற்றிபிறந்தாலே மனைவனைமன்னைகாசாது
கொடிகள்சுற்றிபிறந்தாலே உன்கோத்திரக்காகாதப்பா

கவி.

ஆலகாலத்தையுண்ட அண்ணலார்பாதம்போற்றி
நாலெஷ்டவாக்குபோட்டு நன்மையாய்பார்க்குதப்போது
பாலகன்கழுத்தில்மாலை பிறந்தியிவனுக்குமையா
சீலமாயெடுத்துவந்து உன்கிருதனைப்பார்த்திடாயே.

காசிராஜன் கவி.

சோசியர்சொன்னவார்த்தை சுருக்கிடாசன்கேட்டு
ஆசையாபிறந்தபிள்ளை அதுவிரகமாகதாலே
வாசமாபாலன்தன்னை வண்மையாயெடுத்துப்பார்த்து
தேசனேவிஸ்வலிங்கா தீவினைக்கென்னசெய்வேன்.

தரு.

வேதியர்சொல்லக்கேட்டு விளங்கும்பாலனைகையிலெடுத்தேனே
என்-மாதவத்தால்வந்தமைந்தனை மார்பினிலேற்றினேனே
மைந்தன்கழுத்தினில்மாலை யிருக்குதையாவேதியரே
யினி-விந்தையாகொடிசுற்றி மைந்தன்பிறந்தானேவேதியரே
மூலக்கொடிசுற்றி பாலனைபிறந்தானேவேதியரே
இந்த-முற்றுமான்சேதி உத்தமசொல்லுவீரேவேதியரே
மாலைவிழுந்தால் வரும்விதிகூறிடுவேதியரே
தனம்-வாரிசொரியுரேன் மாரிபோலவருகுவேதியரே

பிராமணன் வெண்பா.

மைந்தன்கொடிசுற்றி வந்தவனைவைத்திருந்தால்
மைந்தன்கிரகத்திலுள்ளோரு மூலகோருப-தந்தையுடன்
கோத்திரத்துக்காகாது கொற்றவனேஎன்னுடைய
சாஸ்திரத்திலுள்ளவிதம்தான்.

காசிராஜன் தரு.

அய்யய்யோநானென்னசெய்வேன் ஆதியேவிஸ்வநாதா
செய்யுந்தபத்தால்வந்த சேயனைநானிழந்து
சிந்தைகலங்குரானே சிவனேசிவனேஅய்யோ

மைந்தனில்லா ஆசையாலே மாதபமிருந்துயானும்
சிந்தித்துசிவனை வேண்டி. சீராய்ப்பிறந்தான்பாலன்
ஆருஞ்செய்யாதவினை யான்செய்தபாவியானேன்
அண்ணலேவிஸ்வநாதா அய்யய்யோஎன்னசெய்வேன்

கவி.

வேதியர்சொன்னவார்த்தை வேந்தனுமனங்கலங்கி
ஆதியேபரமனேயெங்கள் அச்சுதாபச்சைமாலே
நீதியேபிரமதேவன் நின்சுதன்எனக்களிக்க
பேதினாலிந்தசேதி யேந்திழைதனக்குரைப்பீர்.

செண்பகவதி கவி.

அப்பனேமகனேயெந்தன் ஆருயிர்மணியேகண்ணே
செப்பிடமாதிமார்கள் செண்பகவதியாளப்போ
கொப்பனபுவியில்வீழ்ந்து கோதையுந்துயறமுற்று
தப்பிதமசேர்ந்ததென்று தயங்கியேபுலம்புவானே.

தரு.

யென்னசெய்வேன்தீவினைக்கி யெவருடனேபோயுரைப்பேன்
இந்தவிதிவந்ததையா சங்கரனே
அந்தமாதபமிருந்து அன்னதானங்கள்யீய்ந்து
அரனருளால்பெற்றே ஐய்யோசங்கரனே
சந்ததியைகாட்டிலவிட்டு தரணியில்நானிருந்து
யெந்தவிதம்வாழ்வேன் ஐய்யோசங்கரனே
அர்த்தனேவிஸ்வநாதா அண்ணலேநீதந்தவரம்
அல்ப்பமாகபோச்சு தைய்யோசங்கரனே
பெற்றும்பலனில்லாமல் பிள்ளையைநான்காட்டில்விட
பேதைமனம்துணி வேனோசங்கரனே
வைய்யகத்தையாள்வதற்கு மைந்தனில்லாபாவியானேம்
மண்ணிலிருந்தென்னபலன் சங்கரனே (யென்ன)

கவி.

யெந்தன்நாதா யெப்படிகாட்டில்
மைந்தனையெடுத்து மங்கைநான்செல்வேன்
சிந்தைபுபவாடி சிதருதேமனமும்
இந்தஉலகாளபாலன் இல்லையேயென்று.

காசிராஜன் கவி.

யென்னனுஞ்செய்வேனென்று யேங்கியேபுலம்பவேண்டாம்
மன்னிபகுலத்துக்காக மைந்தனைவைக்கொணாது
பின்னையுந்தாம்பாளத்தில் பிரியமாயெடுத்துகொண்டு
தன்னையேவனத்தில்போட்டு சலுதியில்வருகுவாயே.

செண்பகவதி கவி.

மைந்தனையெடுத்துப்பார்த்து மலர்க்கண்ணிலொத்திக்கொண்டு
எந்தனர்ப்புதமேகண்ணே யெவ்விதமுனையெடுத்து
அந்தமாம்வனத்தில்போட அங்கமும்பொருக்குமோடா
மைந்தனைகரத்தில்தாங்கி மாதுமேமடக்கின்றாளே

தரு,

அய்யோமகனே யென்னசெய்குவேன்
உன்னை அருங்கான கத்திலபோட
ஆருமோபனங் கேருமோ
யெந்தன் அங்க முருகுதடா (அய்)
கண்ணே கண்மணியேகனிவேகனியே கற்கண்டேபாகே
உன்னையிந்தகண்காட்சிக்கோயின்றோனிந்தமோசம்பழிகாரி (அய்)
வள்ளல்செவிக்கின்பமல்லோ பிள்ளைமொழிக்கேட்டால்
மனையும்நல்வேதமும்கூருவதே நல்லமார்க்கமோஎனபாலா (அய்)
பசுவைக்கொன்றதோஷம் அதுபரிகரிக்கபோதிலும்
சிசுவைக்கொன்றிட்டபாவமது யெனக்குகித்திக்குமோபாலா (அய்)
மன்னர்மனஞ்சலித்துபெற்ற மைந்தனைக்காட்டில்விட
மங்கைநான் தடுத்து பேசவுநீதியோ
மைந்தனேயென்ன செய்வேன் (அய்யோ)

கவி.

மைந்தனைப்பார்த்துபார்த்து வயற்றினிலறைந்துக்கொண்டு
அந்திரத்திடியைப்போல அலறியேமண்மேலவீழ்ந்து
சுந்திரத்தொனிவேறுகி சோர்ந்துமேபாலனைதன்னை
விந்தையாகாட்டில்விட்டு மெல்லியும்வருகின்றாளே.

பொது வசனம்.

இவ்விதமாகசோசிபர்வார்த்தைபடி காசிராஜன் குழந்தையை கானகத்தில் விடச்சொல்ல செண்பகவதியாள் தங்கத தாம்பாளத்

தில் குழந்தைகளைவைத்து சென்று காட்டில்விட்டுவிட அந்தசமயம் கோனேரி பட்டணமிருக்கின்ற மாதிகசின்னானென்கிய சக்கிலி வருகிறான்.

மாதிகன் கவி.

செருப்புக்கட்டிக்கொண்டு செடிபெருங்கோனேரியில்வாசம்
விளையாக்கொம்பெடுத்துமேலினில்வைத்தூதி
சந்தோஷமுடனேபட்டை தண்ணியிலஊறவைக்க
சிந்தையுமனமகிழ்ந்து மாதிகச்சின்னானுமவருகின்றானே.

தரு.

லல்லாரி லல்லாரி லல்லாரி லல்லா
லல்லாரி லல்லாரி லல்லாரி லல்லா

சொல்லோறமாட்டை தட்டியேஓட்டி
கொம்பெடுத்துதோளில் வைத்துமேமாட்டி
வெல்லியில்கோனேரி பட்டணமாளும்
பெசமானெனும் சின்னான்வந்தேனே நானும்
வசமானஆவாரம் பட்டையைவெட்டி
வார்த்துதண்ணீரினில் சோடுமேகட்டி
ஊறிஉள்ளகோவு மாடுகள்தன்னை

உனக்கில்லையெனச்சென்று யெடுப்பேனுன்முன்னே
காட்டுக்குச்சென்றநான் ஆவராப்பட்டை
கன்னிசொல்லியபநான் கொண்டுபோயகிஷ்டை (லல்)

கவி.

யெந்தனைச்சேர்ந்திருக்கும் மயலானவமச்சமாரே
அந்தமாங்கானகத்தில் அன்புடன்செல்லாக்காளும்
விந்தையாபோசவேண்டும வீநடனழைத்தேனென்று
சிந்தையில்மகிட்சியாகி சிங்காரியை அழைப்பிப்பீரா.

சக்கிலிச்சி கவி.

சித்திரச்சேலைமின்ன சிங்காரிஎழுந்திருந்து
பத்தியாகணவனைசேதி பாவையுப்பிரியேவாமென்று
கைத்தலம்வளையலகொஞ்ச கனகபூஷணமுகத்துடன
உத்தமிசின்னான்தேவி ஒயிலுடனவருகின்றாளே.

தரு.

சந்தோஷமாகச்சின்னான் தந்தமொழிகேட்டிடவே
சிந்தைமகிழ்ந்தெழுந்து சிங்காரிவந்தாள்
கொண்டைகுப்பிசளாட கொங்களஒலைமினை
செண்டுஸ்தனநாயகி சிங்காரிவந்தாள்
சிருத்தயிடை துவள சேலைப்பளபளென்ன
தரித்தப்பணிதுலங்க மைதய்யனுபவரான்
அன்னநடையழகி அஸ்தக்கடகசிங்காரி
சின்னான்மனைவியான சிங்காரிவந்தாள் (சந்தோ)

சக்கிலிச்சி கவி.

என்னிடகாதாரீயும் இந்தசோர்சபையிலன்பா
உனனிடபாதந்தன்னில் ஒருகோடிசருணம்செய்தேன்
மன்னவாயென்னையிங்கு வாருடனழைத்தசேதி
இன்னதென்றெந்தனுக்கு யேற்றவாய்போற்றினேனே.

சின்னான் கவி.

பதமனைதபணிந்துநின்ற பாவைசிங்காரிகேளாய்
உனதயாதிகாலைவேளை உந்தனையழைத்தசேதி

கதிர்புச்சிவருகுமுன்னே காட்டுக்குச்சென்றுநீதான்
அதிவிரவாவாரம்பட்டை அணையேகொண்டுவாருய்.

சிங்காரி தரு.

அப்படியாகுமென்றுநல்ல அழகுள்ளசிங்காரிதானடந்தாள்
கைப்பிடிநீண்டிருக்குசோதி கத்திபெடுத்துமேதானடந்தாள்

நீண்டக்கபரெடுத்து அந்த நேரிழைஅரைதனில்சுத்திகொண்டு
வேண்டியவெத்திலையும் பாக்கும்வேண்டும்
பொருளெல்லாந் தானெடுத்து
காதில்பொன்னோலையின்ன கையில்வளையல்கலகலென்ன
சாதிமொழிப்பேசிகொண்டு தானுமேநாடிவனமேசென்றாள்
கும்பஸ்தனமசைய அவள் கொண்டைக்குயேற்றகுப்பிகளும்
விம்பமுகமிலங்க கனவேடிக்கையாகவேதானடந்தாள்
வந்தவனம்புகுந்தாள் மாந்தமாமலைச்சோலையுங்கிரமிட
விந்தைமயிலாடவன வேடிக்கைகாணுமேதானடந்தாள்
கணபதியைதொழுது கல்லகத்திபெடுத்துமேபட்டைவெட்டி
குணமுள்ளமங்கையருமங்கே குப்பலாய்மரயுங்குவித்திடவே
வெட்டிநடந்தாளேகண்ணுக்கினிதான பட்டையும்வெட்டிடவே
வட்டவிழிமாதுசெய்த மாதப்பலன் அமைப்பிதுவோ
வெற்றிபுசழ்காசிராசன்பெற்ற சுதனையுமழைக்கிடவே
சத்தமுடனழுவே அதனைதய்யல் செவிபடஉதத்துகின்றாள் (அப்)

கவி.

பாலனும்அழுகுஞ்சேதி பட்டுதுசெவிக்கிமெள்ள
காலமாயுத்துக்கேழ்க்க கண்டதுகிழக்குபல்ல
மேலானவடபால்சத்தம் மெதுவாககேழ்க்கவந்தேன்
காலசூரியன்பின்னே கண்ணினுல்சுதனைக்கண்டேன்.

தரு.

அப்பாமகனேவாடாகண்மணியே யெந்தன்
அழகுசுதனேயென்மகனே
அப்பாமகனேநீயும் யார்பெற்றபாலகனே
இப்படிக்குகாட்டிலுன்னை யெறிந்தவிதமறியேனே (அப்பா)

நாகமெந்தனைக்கண்டு பார்த்துப்போகுதே-இனி
கடுக்கமதிகமாகி வேர்த்துசோருதே

சோகமாகியபாலன் சோருதேயென்னசெய்வேன்
ஆகமதுவுந்துன்றி அலருதேயெவ்விதியோ (அப்பா)

உந்தனிட அன்னை தந்தை பெற்றவிட்டாரோ-வவர்
உள்ளசகலங்கிமனம் யேனோகெட்டாரோ

சந்ததிதனைவேண்டி தனிவனத்தினில்விட
மைந்தனென்றுபாருமல் மாளவுமநீயுங்கூட (அப்பா)

மைந்தனில்லாப்பாவிநான் வந்துகண்டேனே-நான்
சிந்தைமனதுமகிழ்வுங் கொண்டேனே

யெந்தனைரக்ஷிக்கவந்த கந்தனேவாடா
அந்திரதோர்கள்போற்ற விந்தையுடனேநீடா (அப்பா)

சிங்காரி தேவாரம்.

ஒப்பில்லாயீசாபோற்றி உன்செயலன்றிவேறே
இப்படிநிருப்பதுண்டோ என்னிடஸ்தனங்கனத்து
அப்பணிசிவனேபாலன் அருந்தவேபால்சுரந்து
செப்பியேதுதிக்குபோது சிலீர்முகந்திரந்துதம்மா.

தரு.

பட்டேனேபாலகனை கட்டிமுத்தமிட்டுக்கொண்டேன்
பால்குடியடாமகனே பால்குடியடா
சட்டமானமணிமார்பில் இட்டப்பணிதுலங்க
தாவியழவேண்டாமப்பா பால்குடியடா
அந்திவண்ணனசெயலாலே எந்தன்குறைதீர்க்கவந்த
அவல்தீரவுமகனே பால்குடியடா
தந்தைதாயெப்படிஉன்னை வந்துமனம்பிரிந்தாரோ
தனையனேஎன்றவல்தீரப் பால்குடியடா
வள்ளலிட்டச்செயலாலே பிள்ளைகலிதீர்ந்தேனப்பா
வாய்திறந்துஎன்மகனே பால்குடியடா
குள்ளநரிநாய்சமூகுஉள்ளவனம் தன்னில்வந்து
கொடுமையேதோவரியேனே பால்குடியடா
காட்டைவிட்டுநாமகமது வீட்டிற்குசெல்வோமடா
கடுகெனவயற்கிரையப் பால்குடியடா

வாட்டமாகியென் கணவன் நீட்டிவாளெடுத்துத்தேடி
வந்திடும்பநேரமாகுது பால்குடியபடா.

சின்னான் கவி.

வாடியேமனதுநொந்து மாதிரச்சின்னானென்கும்
தேடியேவருதுபோது சென்றகானகந்திலன்று
கொடிசூரியனைப்போல குழந்தைதனைக்கையிலேந்தி
நாடியேவருகும்போது நங்கைதனைக்கண்டுரைப்பான.

சின்னான் தரு.

இன்னோங்கானகத்தில் யென்னசெய்தாயோ
அடியென்ன செய்தாயோ
பின்னமில்லாமல்சொல்லும் பேதேசிங்காரி

சிங்காரி தரு

பேதமேதுநாதா நான்போனயிடத்தில்
நாதாபோன யிடத்தில்
தீதானவார்த்தையது செப்பவேண்டாமே

சின்னான் தரு:

செப்பிடவேண்டாமென்ற ஒப்பியேசொல்லுமாதே
ஒப்பியே சொல்லும்
தேவியரேஎந்தனிடக் கோபம்பொல்லாதே

சிங்காரி தரு.

கோபஞ்செய்யவேண்டாம் நாதாகொற்றவனத்தில்
நாதாகொற்ற வனத்தில்
லாபமுங்கிடைத்துவந்தேன் நமக்குயிப்போது

சின்னான் தரு.

கிடைத்தலாபமென்னடி கிள்ளைவாழ்வனத்தில்
அடிகிள்ளைவாழ் வனத்தில்
உடைத்தயதையுண்மைசெய்யடி உண்மைசிங்காரி

சிங்காரி தரு.

உரைசெய்வதேதுங்காணும் யுந்தன்மனதில்
சுவாமி யுந்தன்மனதில்
விரையவேவந்தேனிந்த நீள்சுதன்பாரும்

சின்னான் தரு.

பாருமென்றுரைத்தமாதே பாவையேவனத்தில்
அடிபாவையே வனத்தில்
கூருமதிகதிர்போலிந்தக் குழந்தையேதடி

சிங்காரி தரு.

எதுயிந்தகுழந்தை யெண்ணாதேநாதா
சுவாமி யெண்ணாதேநாதா
நீதிலாபுலத்தினல் கண்டெடுத்துவந்தேனே

சின்னான் கொச்சகம்.

கண்டெடுத்தேனென்றுசொன்ன காரிகையேசமக்கிப்போது
அண்டபிரான்யுண்டுசெய்து அவ்வனத்தில்போட்டிட்டாரோ
மண்டலத்தோர்கொண்டாடும் மைந்தன்றனையென்முன்னே
கொண்டுவந்ததால்முத்தம் கொடுத்தேனடிசிங்காரி.

சிங்காரி கவி.

புத்திரன்தனக்கன்பாக பொழுதுடன்வென்னீருடி
நெத்தியில்திலர்தமிட்டு விரக்கவேமையுக்கீட்டி
பத்தியாமகனுக்கன்பா பால்பழமூட்டிபொன்னின்
சித்திரதொட்டிலிட்டு சிரந்துதாலாட்டுவ[illegible]

சிங்காரி லாலி தரு.

ராரீரோ ராரீரோ ராரீரோ ராரோ
ராரீரோ ராரீரோ ராரீரோ ராரோ.

பாரோர்புகழவந்த பாலனேநீதூங்கு
பாவையென்குறைதீர்க்க வந்தாய்பஞ்சணைமேல்தூங்கு
அரவணையில்வந்துயிலும் ஆயர்குலமாயவனே
சரவணையில்வந்துதித்த சண்முகனேகண்வளராய்
தேடாதிரவியமே திகட்டாததெள்ளமுதே
தாடாண்மைகொண்டுவந்த தனையனேநீகண்வளராய்
ஆர்பெற்றகண்மணியோ ஆரணியந்தனில்வந்தாய்
சீருடனேஎன்கவலை தீர்த்தவனேகண்வளராய்
நாகங்கரடிபுலி நாய்நரிகள்சூழ்வனத்தில்
பாகமுடன்வீற்றிருக்கும் என்பாலகனேகண்வளராய் (ஆரீரோ)

171309

சின்னான் கவி.

சிந்தையுமிகமகிழ்ந்து தேவியுந்தானுமாக
மைந்தனைபள்ளிவைத்து வளமுடன்வளர்ந்துகொண்டு
பந்தமாயுலகோர்காண பாலகன்தனக்குநல்ல
வந்தவயதுபத்தும் வளமுடனிருந்திட்டானே.

பொது வசனம்.

இவ்விதமாக சின்னானும் சிங்காரியும் பாலனைதொட்டிலாட்டி அருமையாக வளர்த்துவரும்போது பத்து வயதாச்சுது மறுபடியும் வீரமுத்துஎன்று நாமக்கிரணம்வகுத்து பள்ளிசாலையில் வேத சாஸ்திரமுற்றுங்கற்று தனது தாய்தந்தையைக் காணும்படி வீரமுத்து வருவது.

வீரைய்யன் கவி.

ஆதியில்காசிநகராளும் வேந்தன்
அருந்தவத்தால்பயன்று அருங்கானில்போட
நீதியுடன்சக்கிலிச்சி சின்னான்தேவி
னோகாவில்ஆவாரம் பட்டைவெட்ட
சோதனையாசென்றிடவே தானெடுத்து
சுதனெனவேமுலைகொடுத்துத் தழுவிகொஞ்சி
மாதிகச்சின்னானகத்தில் வளர்ந்துமுந்தி
மதுராபுரித்துரையவரும் வருகின்றாரே.

தரு.

தத்தம் தனத்த தன தனனா-தானா தனத்த தன தன தனன தனனா.

வந்தாரேவீரமுத்தையன் நல்ல
வாகானபுயமாலை தோளினிலிலங்க

சென்னியில்சிங்காரமாக அழகாய்
சிரப்புள்ளகுச்சியும் சிகதாடுதொங்க
ஆரஞ்சரப்பணிகளபூண்டு வெகு
அணிந்திடுமார்பினில் பதக்கமுமிலங்க
காலினில்சதங்கைகளுங்கொஞ்ச கொண்டு
கடகமணிகைதனில் கத்தியும்பிடித்து
இடையினில்கட்டாரிசூரி நல்ல
யின்பமுடன்பாலாவுந் தோமரம்பிடித்து
ரணரங்கசூரனைப்போல அந்த
நாயகிசிங்காரி தன்னையுங்கோரி
மாதிகச்சின்னானைத்தேடி இந்த
மண்டலமதிர்ந்திடவே வெல்லையதுமீரி (தத்தம்)

வேரு - தரு.

வீரன்வந்தானே துரைமுத்து
வீரன்வந்தானே

வீரமுத்துவந்தேன் மேதினிதன்னிலே
பாரினில்மாதிகன் தன்னையுமுன்னிலே (வீரன்)

பன்னீருமலர்கள்சாத்தி நல்ல
பட்டுடைமேலினில்போத்தி
அன்னவனைதொழ அன்புபெருகிட
இன்னிலமரிய இன்பம்புகழ்ந்திட (வீரன்)

தங்கப்பணியதுதுலங்க முகம்
சந்திரன்போலதயிலங்க
செங்கையினிலணி துங்கவளைமணி
யெங்குமிலங்கிட பொங்கமுடன்முத்து (வீரன்)

தண்டைச்சிலம்பது அணிந்து இரு
தாவடம்காலினில்புனைந்து
மண்டலத்தவர்கள் கொண்டாடவுமென்னை
யெண்டிசையோர்களும் நின்றுதுதிக்கவே (வீரன்)

வீரன் - கவி

ஆதியாம்அனாதியாகி அகிலகாரணமாயெங்கும்
சோதியாசுருபமாகி சொர்ப்பெருமபொருளுமான
வேதனையகற்றிவைக்கும் வித்தகாஉமதுபாதம்
மீதினில்தொழுதேன்யானும் மெல்லடிபாதம்போற்றி.

வேறு - கவி.

யெந்தனைவளர்த்தெடுத்த என்னிடதாயேபோற்றி
பந்தமாயெனக்குகல்வி பயின்றிடுபிதாவேபோற்றி
இந்தநற்சபையிலன்பா யின்பமாயெனையழைத்த
விந்தையையெந்தனுக்கு விபரமாயுரைசெய்வீரே.

சின்னான் கவி.

அப்பனேவீரமுத்து ஆருயிர்மணியேவாடா
இப்பாரிலுந்தனுக்கு யீடல்லாசெங்கரும்பே
தப்பிதமில்லாயெந்தன் தனயனேஉனையழைத்த
சொற்படிவாழ்ந்திருப்பாய் சுதனேநானுரைசெய்வேனே.

பொது வசனம்.

இவ்விதமாக வீரமுத்தையனும் சின்னானும் சமவாதப்பேசிக்கொண்டிருக்க இப்பால் கோனேரிபட்டணமாள்கின்ற பொம்மணனுக்கன் கொலுவுக்குவருகிறான்.

பொம்மணன் கவி.

தொட்டியகுலத்தில்வந்த துரைநாய்க்கர்பொம்மணன்தான்
பட்டுடன்உருமாலதன்ன பாங்கானசரிகைவேஷ்டி
கட்டியேமந்திரிமார்கள் காவலர்நெருங்கிசூழ
திட்டமாகொலுவைநாடி தீரனும்வருகின்றானே.

தரு.

நாகரீகமுள்ளதீரன் நற்சுவையானமாரன்
சேகவர்கள்வந்துகூடவே பொம்மணன்தானும்
சிங்காரமா கொலுவதாகினான்

தோகைமார்கள்தினம்தினம் தொழுதுமேஅடிவணங்க
யேகபோகமானதீரனும் பொம்மணன்தானும்
இன்பமுடன் கொலுவதாகினான்

கட்டியம்எதிரில்நிற்க காவலர்வந்துதுதிக்க
திட்டமுடன்ஆளுந்திரனும் கோனேரிநகர்
தீரன்வந்து கொலுவதாகினான்

ஆரஞ்சறப்பளிகள் அணியும்பிரகாசமின்ன
மாரனைப்போல்வடிவந்துன்னவே பொம்மணனுக்கன்
மகிகூறியதா வந்துமேவினான் (நாகரீக)

கவி.

பொருமையும்பெருமைகொள்ளும் பிசபிலம்படைத்தளந்தன்
அருமைசேர்சேவகாளே யான்சொல்லும்சேதிகேளீர்
வருமையுமில்லாநாடு வளப்பமும்மிகுதியுண்டோ
ஒருமையாயெந்தனுக்கு உத்ததுதெரிவிப்பீரே.

பொம்மணன் தரு.

ஆருங்காண்மந்திரிகளே அரிவிப்பேன்தெரிவீர்களே
கூருவேன்நமதுநகற் கோனேரிபட்டணமும்
(சுருள்) குத்தமுமுண்டோ நித்தம்பயிரிடும்
உத்தமிமார்களும் மெத்தக்ஷேமந்தானோ (ஆரு)

தொட்டியகுலத்தில்வந்த துரைராசசனவர்களும்
திட்டமாகாலைமாலை சிவன்தனையேபணிகின்றாரா
(சுருள்) சேதியைநன்றாய் ஓதுவீரெனக்கு
பூதலமரிய காதலாதனக்கு (தொட்டி)

அன்னதானங்கள்செய்து ஆரிலோர்கடமைகட்டி
இன்னிலத்தில்வருகின்றாரா யெனக்குமையுமந்திரிகளே
(சுருள்) இன்பத்தைஅரிய உண்மையைசொல்லும்
சம்பத்துஉண்டோ சாற்றிடவில்லும் (அன்ன)

யெந்தன்குலசாகியன்னர் யென்னைவந்துதினந்தினமும்
கந்தமலர்கனைனாலே கடிகிபதம்பணிகின்றாரா
(சுருள்) காட்டுவீரேமனம் காட்டுவீரமந்திரி
வீட்டிலிருந்திட காட்டினேனந்திரி (யெந்தன்)

கவி.

அப்படியானமக்கு அதிகசந்தோஷமாச்சி
கற்பினிதவத்தால்வந்த கண்மணியெனதுசெல்வி
தற்பரன்செயலினாலே தையலுயருதுவுமானாள்
சொற்படிசின்னான்தன்னை சருக்கினில்போகச்செய்வீர்.

பொது வசனம்;

இவ்விதமாக பொம்மனன் தன் குமாரத்தியான பொம்மியம்மன் ருதுவானது சேழ்வியாகி முப்பதுநாளைக்கி ஆண்மனைக்காகா தென்று பச்சைப்பந்தல் அலங்கரித்து கானகத்திற்கனுப்பி சின்னானை காவலுக்கு திட்டஞ்செய்ய அந்தசமயம் பொம்மியம்மன் பச்சை பந்தலுக்கு வருகிறாள்.

பொம்மி கவி.

இப்படியிருக்கும்நாளில் மியலுள்ளபொம்மனனீன்ற
செப்பிளமுலையாள்பொம்மி திரண்டிடஊருக்கப்பால்
மெய்ப்புடன்குடிசைக்கட்டி வேந்தருமனுப்பிவைக்க
தப்பிதமில்லாதேக தைய்யலும்வருகின்றாளே.

தரு.

வெங்குந்துதிகள்பெற்ற திங்கள்தொட்டியகுல
மங்கைபொம்மியும்வந்தாளே நல்லஅதிவிதருமி
மங்கைபொம்மியும்வந்தாளே

சங்கையில்லாதாதியர் தன்னருகினில்சூழ
திங்கள்முகவதனந் திரிலோகமும்விளங்க
(சுருள்) திரிகிடதகசெம் தரிகிடவெனவே
தளங்குதகதிக ததிங்கிணமென்று (வெங்கு)

செங்கையிலணிவளை கங்கணமுந்தரித்து
திவ்வியமானப்பணி மேனியெலங்குங்களித்து
(சுருள்) நித்தியமல்லிகை ஒத்துமேமலருடன்
நத்தியசக்கிர்த நாதமுழங்கிட (வெங்கு)

தோகைமயிலைப்போலே சாயல்தியுமேலே
சந்திரமான அழகும் வந்துதினம்பழகும்
(சுருள்) தோகையாள்பணி யெங்குமின்னிட
வாகுசேர்மொழி வந்துபன்னிட (வெங்கு)

நடனசங்கீதமேள வாத்தியமுமுழங்க
நாகரீகமாமுத்துக்குடையும் கொடிதுலங்க
(சருள்) நாடியேசின்னான் காவலேவேண்டி
தேடியேவருகவும் செப்பவும்தாண்டி (யெங்கு)

கலி.

என்னிடதோழிகேளாய் யிருந்தனுள்இருந்தமட்டும்
கன்னியும்ருதுவுமானேன் காரியமாகாதென்று
தன்னுடன்குடிசைக்கேகி தாதியருடனிருந்து
நன்னயகாள்கழித்து நாமுமேவருகுவோமே.

தரு,

யெழுந்துநடந்தாளே பொம்மி
இன்பமுடன்நல்ல தோழியுடன்
தழைந்தசங்கீத முடன்நல்ல
தாணியெங்கும்வாத்திய மொலித்திடவே
சந்தனம்புனுகு மலர்சூடி
சரிகைபட்டாடையும் உடுத்திக்கொண்டு
விந்தையுடனடந்து பொம்மி
வேடிக்கையாகவே தானடந்தாள்
பச்சைப்பந்த லமர்ந்தவிதம்
பாருள்ளோரரிந்து தான்மகிழ
இந்தநல்லப்பந்தலிலே பொம்மி
விருந்துமேகாளே கழிக்கலுற்றுள்

பொது வசனம்.

இவ்விதமாக பொம்மியம்மன் பச்சைப்பந்தலில் வ... ...து கழித்திருக்க மாதிகச்சின்னான் வீரைய்யனைப் ... ...கிறான்.

சின்னான் தரு.

வீரமுத்தே
யென்னசெய்வேனடா வீரமுத்தே
பாலா வீரமுத்தே
யேங்கிமனம்வாடுரண்டா

வீரன் தரு.

மனம்வாடிநிற்பதென்ன தந்தையாரே
அய்யா தந்தையாரே
மைந்தனுக்கோதுமைய்யா தந்தையாரே

சின்னான் தரு.

ஒதினல்உந்தனுக்கு வீரமுத்தே
அடா வீரமுத்தே
உன்னாலேஆகுமடா வீரமுத்தே

வீரன் தரு.

யென்னாலாகாதகாரியம் அய்யாவே
யெந்தன் அய்யாவே
இவ்வுலகினிலுண்டோ அய்யாவே

சின்னான் தரு

உண்டோவென்றென்னைக்கேழ்க்கும் வீரமுத்தே
அடா வீரமுத்தே
நன்றல்லசிருவனாச்சே வீரமுத்தே

வீரன் தரு.

சிருவனென்றுரைத்திட்டாய் தந்தையாரே
எந்தன் தந்தையாரே
சிங்கம்போல்பாய்ந்திடுவேன் தந்தையாரே

சின்னான் தரு.

யாய்வதுசரிதானப்பா வீரமுத்தே
அடா வீரய்யனே
பாவைபொம்மியர்க்கு காவல்செய்யவேண்டும்

வீரன் தரு.

பொம்மியிடகாவலுக்கு தந்தையாரே
போய்வர[illegible]மும தந்தையாரே
தந்தையாரே

சின்னான் கவி.

விடைகொடுத்தனுப்புமென்ற வீரைய்யாஒன்றுகேளும்
திடமுடன்மழையிருட்டில் சிருவனேஒண்டியாக
தடையில்லாசென்றுநீயும் தையல்பொம்மியற்குகாவல்
அடவுடன்செய்துகாலை அப்பனேவந்திடாயே.

வீரன்- கவி

சென்றிடும்ஒருநாள் தன்னில் செகமெலாம்பிருண்டுமேகம்
கொண்டுமேமழைகள்பெய்து கொடுமையாயிருப்பதாலே
இன்றுமேகாவலுக்கு யான்சென்றுவருவதாலே
நன்றுமேதாள்பணிந்து நயந்துநான்வருவேனைய்யா.

வீரன் தரு.

மாதிகன்உத்திரவுபெற்று — யெந்தன்
மனதினில்சந்தோஷ — மாகவேஎழுந்து
நீதியாஅன்னம்பொசித்து — நல்ல
விலைபெற்றசல்லடமுங் — கச்சையுமிரிக்கி
சந்தனம்புனுகுமலர் — சூடி
சந்திரகாரமாலையும் — சரிகையுமுடுத்தி
அந்தமுடன்முத்துக்கடுக்கன் — நல்ல
அழகுடனேகாதி — லணிந்துமேகொண்டு
கையினில்கணையாழிப்பூண்டு — நல்ல
கட்டாரிவளைதடி — கைகளுரியெடுத்து
சைய்யோகமானதுரைவீரன் — வெகு
தடியுடன்மந்திர — வாள்சக்கரமெடுத்து
மிதியடியும்இருகாலில்தொட்டு — இந்த
மின்னலிடும்வெளிச்சமதில் — மீறியேநடந்து
மதிபொம்மையாள்குடிசைநாடி — இதோ
வருகிறான்வீரைய்யன் — மான்வேகமாக (மாதிகன்)

வீரைய்யன் கவி.

வடிவழகானவீரன் மங்கைமேலாசைகொண்டு
விடியுமுன்னவளைக்கூடி மேவிடவேணுமென்று
துடியுடன்நடந்துகாட்டில் தோகைபெண்ணிருக்கும்பச்சை
குடிசையினருகில்வந்து குணமுடனுரைக்கின்றானே.

தரு.

தேனேதேமாங்குயிலேகிள்ளை — திகட்டாதமாமயிலே
யேனோயிந்தவனத்தில் — தனியாகநீவந்திட்டாயே
கானகந்தன்னில்வந்துநின்று — கலங்கிதவித்திடவும்
மானார்மடக்கொடியேஇன்று — வந்தேனேநான்கெடியே
சித்திரசெண்பகமே — உன்னைகத்திவந்தேன்தினமே
பத்திரைமாத்துப்பசும்பொன்மேனி — யானபாவைசிறேன்மணியே

கொஞ்சங்கிளிமானே அடிகுத்தமிலாதானே
பஞ்சணையிலிங்கேபவனிக்காமல் அங்கேபார்வனத்திலிருக்க
உன்னிடகாவலுக்குரான் கன்னியரேயமர்ந்தேன்
மன்னன்பொம்மணன்பெத்தமாது சிறேன்மணிவடிவழகியாளே.

கவி.

இத்தனைநேரமாக இவ்விடம்வந்துயுன்மேல்
பத்தியாகிதம்பாடி பாவையேகொஞ்சினேனே
முத்திலும்வாய்திறந்து மொழியதுபுகன்றிடாமல்
சித்தினியாளேநீயும் சேர்ந்திதனை அணைந்திடாயே.

பொம்மி சீசபத்தியம்.

ஆடாபாவிநீஇந்த அர்த்தருத்திரிதனில்
அச்சமில்லாமலெதிர் வந்தாய்நீதான்
சிருடனேவந்துமே சேருமென்றுரைத்திட்ட
திருடனேநான் தெரியேன்செப்புவாயே.

வீரன்.

செப்புவாயென்னிட சேதிகள்மாதியன்
செயனருள்பெத்திட்ட முத்துவீரன்நானே
மெய்ப்படிதங்கையும் மழையிருட்டானதால்
மங்கையலர்வாருமல் எனை அனுப்பினரே.

பொம்மி.

மாதிகன்மகனே நீ வந்தவாறென்னடா
மங்கையாளறிந்திட தெரியச்சொல்லும்
நீதிசேர்உந்தன் தந்தை யின்றதுயேனோதான்
நிகழ்த்துவாயுண்மையை நிலமையறிய.

வீரன்.

அரியவேசொல்கிறேன் அந்திரம்பூமியும்
அதுவொன்றும்பிசகாது அருமையயானே
ஒருமையாஇடிமின்னல் இருளதுவுமானதால்
ஒகோரகோரனிவ்விடம் வந்திருக்க.

பொம்மி: இங்கேவராதடா வெட்டகில்லும்.

வீரன். நில்லென்றுசொல்லாதே நேரில்மானே.

பொம்மி. தங்கனேமாதிகா தூரநில்லு.

வீரன். தோகையேதயவுசெய்யடி சகுணமாதே.

பொம்மி கவி

ஆடாபாவியிந்த அர்த்தருத்திரியில்வந்தாய்
கூடாயில்லாவிட்டால் கொடியதோர்வாளினாலே
பாரடாயிருதுண்டாக பகுந்துயுன்னுடலைவெட்டி
வேறடாசெய்வேனிப்போ வேந்தனேயெருவாயே

வீரன் தரு.

போடாவடாவென்று ஓடிப்போகச்சொன்னாய்
அடிபொம்மியே மாதிகன்வீட்டில்
வளர்ந்தபுதல்வண்டி என்னை
பொருந்திமனம்யின்பமா சேர்ந்துகூடண்டி

பொம்மி தரு.

கூடிசுகிபுமென்ற வேடிக்கைவார்த்தை யிங்கே
கொண்டுவருகலாமோமூடனே முந்நீராம்
பண்டுபமுகினோமோகேடனே

வீரன் தரு.

கேடனேயென்றுயென்னை மோடியாய்ப்பேசாதே
செலிப்பாய்நாமிருவரும்சோடி பெண்ணே
கேளிக்கையாவந்தென்னைக்கூடடி.

பொம்மி தரு

வந்தென்னைக்கூடுமென்று சொந்தமாயுரைத்து
மார்க்கமாயேசவந்தவைய்யலே சக்கிலி
வாயாலழிந்திடாதேயைய்யலே

வீரன் தரு

கேடுயென்னடியுனக்கு பேடுஞ்சேவலும்போல
கிட்டியேசேர்ந்திடுவோம்பேசாதே அடி
இருதுசெய்துமேகைவைவீசாதே

பொம்மி தரு.

வாடிபோடியென்றுநீ வார்த்தைபேசாதேமூடா
நாடியேயுன்கையை அருப்பண்டா என்னைக்
கூடிடவுந்தகுமோகுடிகேடா

வீரன் கவி.

குடிகேடனெனவுரைத்த கோதையேபொம்மியாளே
அடியுடன்கோபங்கொண்டு சொல்வதைமருத்துயெந்தன்
வடிவழகதனைப்பார்த்து மனதுவைத்தின்றுருத்திரி
விடியுமென்னென்னைக்கூடி மேவியமைய்யல்தீருய்.

பொம்மி கவி.

கூடியேசுகிபுமென்ற கொற்றவர்சண்டாளபாவி
தேடியேதிருடவந்த துஷ்டனேவெளியேபோடா
மாடியேஅடிபிடித்து மாரனல்வாதைபட்டு
ஓடாகுடிசைவிட்டு உன்னையேசிதைப்பேன்பாருய்.

வீரன் ஓடி தரு.

மைய்யல்மீருதேகண்ணே என்னை
மருவிகூடடிபெண்ணே

பொம்மி தரு.

யேதடாகொஞ்சப்பேச்சு உனக்
கேண்டாயிந்தவீச்சு

வீரன் தரு.

வெளியில்போவதேஞாயம் யென்னை
வேண்டிசெய்வதுபாயம்

பொம்மி தரு.

கூடிடமனம்வையாதே நீ
குரும்பிங்கவும்செய்யாதே

வீரன் தரு.

ரஞ்சிதமாமயிலே கொஞ்சி
வந்தணைவாய்க்குயிலே

பொம்மி தரு.

ஆவியுமுருகுமடா அடப்
பாவிபையலேபோடா

வீரன் தரு.

ஆசையுங்கொண்டேன்மானே அருகில்
பேசவும்நீதானே

பொம்மி தரு.

அருகினில்வாடியென்று சீ சீ
மாதிகன்மகனேபோடா

வீரன் கவி.

மாதிகன்மகனென்று மதியாரியில்லாமல்
  வர்மமாயுரைத்ததிம்மாதே கேளாய்
சேதிகளரியாமல் வெந்தணைநீசும்மா
  சேயிழையாளே பொம்மி
நீதியோமழையில்கான் விர்ப்பனையசிந்தமே
  செருங்கிடவும் மனதுவல்லே
யேதினியென்மேல் மோடியுஞ்செய்வது
  யிறங்கலையோ பொம்மியாளே.

பொம்மி கவி.

தொட்டியகுலத்தூாச தூர்தான்வபத்துகித்தேன்
கட்டியக்கொடித்து என்னைகலியாணமாகுமுன்னே
தொட்டிசக்கிலியன்கூடி தொடறவும்விதியெனக்கு
மட்டில்லாவந்ததென்று மங்கையும்புலம்புவாளே.

தரு.

இந்தவிதிக்குயென்னசெய்குவேன் ஒ யீஸ்பரனே
யீசனேகைவிலவாசா யென்னசெய்வேன்

விந்தையுடன்காவல்வந்துநின்றனே ஒயீஸ்வரனே
மெல்லியாள்கற்பை யழிக்கத்துணிந்தானே
நீதியாயென்னைபொம்மணனுக்கன் அருந்தவஞ்செய்து
சோதிபோலென்னை பெற்றனேமோ
நீதுசெய்தென்னைமாதிகன்மகனும் ஒயீஸ்பரனே
சென்றனேமைய்யல் கொண்டானபெருகியே
மாலையிட்டுமணக்கோலஞ்செய்முன்னே எனைக்கூடன்று
வந்தானகாதலா விந்தைசெய்யவே
ஒருவர்செதியும்பெவருங்காணனே ஓமகாதேவா
ஓடியெந்தனைக் காக்கவாருமே
திருவேமுக்தாலம்மாகிருபைபாருமே ஓம்காதேவி
சித்தம்வுந்தனல் வைத்துக்காருமே (இந்த)

வீரன் கவி.

இவ்வகைபொம்மியம்மன் யேங்கியே அழுகும்போது
ஒவ்வியேகுடிசைஉத்தமிதனையெடுத்து
சவ்வியேமடியில்வைத்து கண்ணில்நீர் துடைத்து
சிவ்வென் றுரைக்குமாதே சீக்கிரம் அணைகுவாயே.

வீரன் தரு பின்னால் சொல்வது.

மானேமறகதமேயெந்தன் வஞ்சியர்மோகாஞ்சிதமே
தேனே அமுர்தகுணமாதே செப்புகிறேனிப்பொழுதே

ஆதிசிவனாளால்காசிராசனு மாண்டிடுமன்னகரில்
நீதியுடன்பிறந்தேன் அன்று சேரிழைமன்னருங் கூரிடவே
மெத்தமனமகிழ்ந்துமன்னர் வேதமறையோரைதானழைத்து
நேர்ததியுடனறிந்துஅவர் நீதிமுறைதனைக்கேட்டிடவே
மறையவர்பார்த்திடவேகழுத்தில் மாலைசுற்றியிருக்குதென்றூர்
அந்தசுதனிருந்தால்உமக்கு ஆகாதென்றுமறையோருரைத்திடவே
கொண்டுபோயி கானகத்தில்விட்டு
கொப்பனவாவென் றுரைத்திடவே
சோசியர்சொற் படிக்குயென்னை
சொர்னதாம்பாளந் தனனிலவைத்து
வந்துவனத்தில்விட்டுப்போக மங்கையுமங்கேஇருக்கையிலே
ஐந்துதலைநாகபவந்து ஆதரவாயென்னருகிருந்து
சோதிவெயில்படாமல்காக்க துயறத்துடனழுகையிலே
மாதிகசக்கிலிச்சிகண்டு மைந்தனென் றுமேஎடுத்ததனைத்து
சீராமுலைகொடுத்துயென்னை சேயனனேவளாத்தெடுத்து
பாரோரமிந்திடவேதமிழ் பாடகசாலையில்படிக்கவைத்து

நாளிடைமாதியனும் என்னை
உன்னிடம்காவலுக்கு போகச்சொன்னான்
வலுவேகமாககடந்து துரைவந்து ஞானின்றமேகாவலானேன் (மா)

பொம்மி தரு முந்திசொல்வது.

மன்னவரேயென்னரசேமாரனே முத்துவீரனே
தென்னவனேயீஸ்பரனே செங்கமலவாசவனே
இரதிரனேசந்திரனே யிக்குவக்கவேள்மகனே
சந்திரேனுசூரியனே தாரணியின்மன்னவரே
திக்கிலுள்ள ஆடவரும் தெரிகிறேனேனென்சுவாமி
சக்கிலியின்வீட்டில்வந்து தான்வளர்ந்தகென்னசொல்லும்
ஆர்பெற்றகண்மணியோ பூர்வத்தைச்சொல்லுநாதா
சிந்தித்துக்கேட்டபெந்தன் சிறுபிழையேபொருத்திடுவீர் (ம)

வீரன் தரு. மானே மரகதமே.

பொம்மி தரு.

வாரும்வாரும்யென்கணவரே அழகில்மிக்க
மங்கையர்க்குசுக்க சீலரே
மக்கிலியன்கூட்டமன்னவா என்னைபணர்ந்து
மையல்தீரும் வந்துமுன்னவா
பஞ்சணைமீதில்கூடியே இச்சைபெருகி
பக்ஷமுடன் விளையாடியே
மிஞ்சியேலீலைகள்புரிந்து ஸ்சனம்பெருகி
வேடிக்கையாக் கூடிக்கலந்து
உன்னைவிட்டுகாணிருப்பேனோ அரைநிமிஷம்
உள்ளமஞ் சகித்திடுவேனோ
சங்கையில்லாமல்கலந்து இருவரும்சுவாமி
சாயங்கால வேளையில்வந்து
மங்களமாகவேகூடுவீர் தினம்தினம்வந்து
மாதாசிகிச்சயப்சொன்னேன் எனதுநாதா

வீரன் கவி:

என்னையும்பிரியேனென்று பிதமாகச்சொல்லவந்தாய்
உன்னையும்சடங்குசெய்தால் உன்தாயிவீடுசேர்ந்தபின்பு
அன்னையுந்தந்தைசுற்றந் தாசையுமறந்தபெந்தன்
பின்னாலேவருவேனென்று பிரியமாகைப்போடும்பெண்ணே.

பொம்மி கவி.

கைபோடுமென்றுசொன்ன கணவரேசொல்லக்கேளீர்
வெய்யவர்தேவர்மூவர் விமலர்மண்விண்ணுள்ளோர்கள்
வையகம்பூமாதேவி மறையவர்சாக்ஷியாக
மெய்யிதுஉண்மையென்று விராடிகாண்பிரியேனுதா.

பொது வசனம்.

இவ்விதமாக மதுரை வீரைய்யனும் பொம்மியம்மனும் சீர சைய்யோகமா இருக்கையில் இப்பால் பொம்மணுக்கன் தனது குமாரத்தியாகிய பொம்மிக்கு காவல்வைத்த சின்னணை விசாரிக்கிற விதங்காண்க.



பொம்மணன் கவி.

பத்தியா அடிபணிந்த பரிவுள்ளகாவலோரே
உத்தமவசனமொன்று உரைப்பேனுன்கேளுமிப்போ
நத்தியோமதுசெல்வி கலமுடன்பந்தலுக்கு
குத்தமுமுண்டோபார்த்து கூருவீர்கூருவீரே.

ஷை பொம்மணன் கவி சடங்கு வசனு பொம் தரு

இதவென்னமோசம்மோசம் பென்மகள்பொம்மியாளை
மதிதனைகுலைத்துயாரோ மானபங்கங்கள்செய்தான்
கதிபணிமாபேடந்தன் கற்றுளைபணிந்துபோற்றி
சதிவந்ததென்றுரைத்து தயங்கியேபுலம்புவானே.

தரு.

யென்னசெய்குவேனைய்யோ — யீசானையிலைவாசா
யென்தன்மகளைக்காணேன் — ஓ செய்வமே
சன்னிக்கழியவில்லை — கங்கண்முந்தரிக்கவில்லை
கள்ளனாரோஎடுத்தான் — தெய்வமே
அன்னவாகனன்செயல் — அமைத்தவிதியிதுவோ
ஆரும்எதிர்க்காணனே — தெய்வமே
இந்திரர்தேவரானுல் — யினிசும்மாவிடுவேனோ
யேகபோகமழிப்பேன் — தெய்வமே
ஆரும்யீடல்லவென்று — ஆண்டேன்கோளரிதேசம்
அழிந்துதேபேரெனக்கு — தெய்வமே
யெப்படியிருந்தாலும் — யென்திறம்போய்விடுமோ
இடர்செய்தோன்தன்னையும் — நான்விடுவேனோ

பொம்மணன் கவி.

ஆடாசிறுவனேநீ அச்சமில்லாமல்வந்து
தோடாயென்னகிர்வம் செல்வியையெடுக்கவந்தாய்
பாராடாஉன்னையிப்போ பழுதுகள்செய்துமுன்னே
நேரடாகழுகுகாகம் யிபுணனேஇரைசெய்வேனே.

வீரன் கவி.

கண்டவுடனெழுந்திருந்து சேனைசூழ
கண்களுமேசிவந்திடவே கோபமீறி
அண்டமுமதிர்ந்திடவே பேசிக்கொட்டி
அதட்டியேஆர்பறித்து யெதிரில்வந்து
கொண்டலெனுங்குதிரையின்மே லேறிக்கொண்டு
கோனதபொம்மிகாயகியே மந்திரவாளை
வண்டுளபமணிவண்ணன் தனைநினைந்து
வாழ்த்தியேயென்கரத்தில் தந்திடாயே.

பொம்மி தரு.

யென்னநான்செய்வேனையோ மன்னவரே
யெங்குதேமனம்வாடி மன்னவரே
கண்கொள்ளாப்படையைக்கூட்டி மன்னவரே
கட்டப்பொம்மணன்வாருர் மன்னவரே
மதியூகமந்திரியுடன் மன்னவரே அவர்
வருகுமிதம்பென்னசொல்வேன் மன்னவரே
மாளாசேனையுடன்வந்து மன்னவரே நம்மை
மாராட்டஞ்செய்வாரையோ மன்னவரே
சதிசெய்துகொல்லுவாரே மன்னவரே அந்த
சண்டாளமாபாவி மன்னவரே
துரைமுத்துவீரைய்யனே மன்னவரே இதோ
தூள்பறந்திடவாருர் மன்னவரே
யெழுந்திரும்பிராணநாதா மன்னவரே நாம்
இரணகளம்வருகுமுன்னே நடக்திடுவோம் (யெ)

பொம்மணன் கந்தார்த்தம்.

ஆனையும்சேனைக்கூட்டி அடங்காதகோபங்கொண்டு
நானிலம்நடுநடுங்க ரணகளந்தன்னில்முன்னே
வானவர்மதிமயங்க வந்துமேலனைத்துக்கொண்டு
மானிலம்புகழவந்த

தரு.

மடிப்பேனென்றுமேகூறினர் ரணகளத்தில்
அடிப்பாவார்த்தைகள்மீறினர்
இடிப்பாயுலகமெங்கும் யேளிதமுரைத்திட்ட

(சுருள்) யேதடாளுது வாதுகள்யேது
தீதுகள்பட்டிட சிருவனேகெட்டிட (மடிப்)

வீரன் கந்தார்த்தம்.

சிரசினை துணிப்பேனென்றும் சித்திரவதைசெய்வேனென்றும்
உரமுடன்பேசிக்கொண்டு ஒருமித்துநெருங்கக்கண்டு
வரபுயனானவீரன் மனதிலேகோபங்கொண்டு
விரகுடன்பரிநடத்தி

தரு.

வீரன்மன்னரைக்கிட்டினன் மதுரைமுத்து
வீரன்மன்னரைக்கிட்டினன்
தேரும்புரவியுடன் சேனைகள்காலாளும்
(சுருள்) சின்னபின்னமாக கண்கள்கலங்கிட
உன்னிதமாகவே அங்கம்பிளந்திட (வீரன்)

பொம்மணன் கந்தார்த்தம்.

கிட்டியேவந்தபோது கெடிமிசையுலகமஞ்ச
மட்டில்லாபுகழ்படைத்த மகாசிருபையலேயுன்னை
அட்டியில்லாமல்செல்வியை அருஞ்சிரையெடுத்தாயென்று
வெட்டியேகொல்வேனென்று

தரு.

வேளிதமாகவந்தாயே அட்டாநீயும்
தூளிதஞ்செய்பனென்தாயே
கூளியும்கழுகுகாக்கை கொண்டிடநமன்பதிக்கு
(சுருள்) கூத்துவனரிய ரத்தமுஞ்சொரிய
பார்த்திபர்தெரிய சேர்ப்பேனென்முரிய (வேளி)

வீரன் கந்தார்த்தம்.

நாற்றிசைதனிலுஞ்சேனை நடுங்கியேமதிமயங்கி
கூற்றுவன்இவனேவென்று கோவெனகதறியோட
சேற்றியாகொக்கின்மீது நேர்ந்தராசாளியைப்போல்
பார்த்திபன்சேனைதன்னை

தரு.

பாய்ந்துதுரத்திவெட்டினன் வீரமுத்தையன்
ஆய்ந்துமுருக்கிசுத்தினன்
பாய்ந்துதுரத்திவெட்ட சாய்ந்துபகடைகள்முட்ட
(சுருள்)தேய்ந்துயீசலைப் போலமடிந்திட
சாய்ந்துநிலந்தனில் கால்கள்முறிந்திட (பாய்ந்)

பொம்மி கவி.

தெரிந்திடவீரன்கைபால் சேனைகள்மடியக்கண்டு
அரிவுமேமிகலழிந்து ஆபாசமதிகமாகி
உரியவேதந்தையாரும் உயிரதுமாண்டாரென்று
பிரியங்கள்விட்டொழிந்து பேதையும்புலம்புவாளே.

தரு.

அய்யோகாளென்னசெய்வேன் — எந்தன்
அங்கமுருகு — திப்போ
வையகத்திலென்னைப்போல — தந்தைக்காகா
மாபாவியெங்கு — முண்டோ
தரையினில்என்னைவிட்டால் — பொன்னின்
தண்டைக்கால் — நோகுமென்று
அரையினிலென்னைவளர்த்த — வெந்தன்
அய்யா — காணிழந்தேன்
பாராளும்என்தகப்பா — என்னால்வந்து
பறலோகஞ் — சென்றாயே
தேறுதெனதுசிந்தை — யினியென்னசெய்குவேன்
தேங்குதே — மனம்வாடி
பெண்ணாலேமாள்வாயென்று — அன்னாளில்
பிர்மன் — அமைப்பிதுவோ
மண்ணினில்மாண்டிட — ஆயன்விதியது
வந்ததேன் — என்தகப்பா
சட்டிலின்மெத்தையின்மேல் — படுத்து
கண்ணுறங்குந் — தந்தையே
இப்போவெட்டவெளி — மணலில்உறங்கிடவே
தன்விதி — யிதுவோ
ஆசிப்பதரிஞெந்து — மெழுகுபோல்
அங்கமுருகு — தைய்யோ
பாவிகைஆயுதத்தால் — சென்னியற்று
பாரினில் — விழுந்தீரோ (அய்யோ)

கவி.

அரும்பாவிஎன்னசெய்வேன் அன்புடன்தந்தைமாண்டார்
கருகுதேமனமும்வாடி கர்த்தனார் அமைப்புதானோ
உருகவேபடுசளத்தில் உயர்தனைமாளச்செய்தீர்
பெரும்பாவியானேன்காதா பெண்மயிலென்னசெய்வேன்.

வீரன் கவி.

தந்தையின்மீதில்வீழ்ந்து தனித்தவள்புலம்பும்போது
சிந்தையாவீரன்சென்று தேவியாள் துயரமாற்றி
எந்தனர்ப்புதமேபொம்மி யெழுந்திருமென்றுசொல்லி
சந்தனக்கட்டைக்கொண்டு தகனமேசெய்யலுற்றார்.

பொது வசனம்.

இவ்விதமாக பொம்மியம்மன் துயரமகற்றி பொம்மணனையெடுத்து தகனஞ்செய்து வீரமுத்தையனும் பொம்மியம்மனும் புரவியின்மேலே திருச்சிராப்பள்ளிக்கருகில் செல்ல அப்பட்டணத்தையாளப்பட்ட விசையசொக்கலிங்கனுக்கா கொலுவுக்குவருகிறார்.

விசையசொக்கலிங்கனுக்கர் கவி.

அகந்தனிலிருந்துக்கொண்டு அமைச்சர்களனேகர்சூழ
மிகுந்தயவுடனெழுந்து வேதியர்மறைகள்பாட
செகந்தனில்புகழ்பெற்றோங்கும் திருச்சிராப்பள்ளியாளும்
சுகம்பெரும்விசைய சொக்கலிங்கரும்வருகின்றாரே.

தரு.

சொக்கலிங்கேந்திரனே விசையனுக்கர்
சொக்கலிங்கேந்திரனே

திக்கெக்கும் புகழ்கீர்த்தியே
சிரக்கசெங்கோல் செலுத்தும்
சேனைப்படைதனை கனைக்கூட்டியே
ஆனைப்புரவி தன்னைபும் ஓட்டியே (சொக்)

வெங்கும்பளபளென்னவே முடியிலங்க
விங்கிரதந்தனதனன்னவே

தங்ககவசமெய்யில் தகதகவொளிமின்ன
மங்களமாகவே நல்மாதர்களாடிடவே
மகிழ்வியது பொங்கிடமாதரும்
புகழ்பெற் றிடவேநீதரும (சொக்க)

சரிகைஅங்கிதுலங்கவே அதின்மேல்பட்டு
சந்திரகாரமிலங்கவே

விருதுகுடைகள் கூட விளக்கும்கூதாமரம்போட
வேடிக்கையாகநல்ல கூடிதினமும்சாட

வீணைதம்பு ருடன்பாடிட
காணவந்து மன்னர்களாடிட (சொக்க)

காந்திமலர்கள்சூடியே கட்டியம்வந்து
ஓந்திபோல்பணிந்துபாடியே
பூந்துகில்மாதர்களும் போற்றுமறையோர்தினம்
யேந்திகரம்வணங்க யிருதயமும்குலுங்க
இன்பத்துடன் மகிகூறியாபொங்கிட
தென்பாமலர் தன்னையேவிளங்கிட (சொக்க)

கவி.

வேதமுமுறைகடந்து விளங்குஞ்சாஸ்திரங்களாகும்
பூதலமகிழவந்த பொர்ச்சிம்மாதனத்தில்யாவும்
யேதேதுகுறைகளுண்டோ வெனக்கதைசொல்வீர்மந்திரி
தீதுகளரியகன்ருய் தெரிவிப்பீர் அரிவிப்பீரே.

வீரன் கவி.

இஷ்டமதாதொட்டியகுலம் விளங்கவந்த
இயலானபொம்மணனுக்க னீன்றெடுத்த
கஷ்டமில்லாபொய்யிதனை புரவிமீதில்
கனமுடனேயேத்தியந்த வீரைய்யன்தான்
தட்சணமேதிருச்சினப் பள்ளிசார்ந்து
தைய்யலுடன்மனமகிழ வீணைமீட்டி
பக்ஷமதாதன்வாயால்கீதம்பாட
பாவையரும்வீரமுத்து மகிழ்ந்திருந்தான்.

பொது வசனம்.

இப்படியாக விசையசொக்கலிங்கனுக்கர் கொலுவிருக்க இப்பால் வீரமுத்து அந்த திருச்சினப்பள்ளி வீதியில் புரவியின்மீதிலேரி பொம்மியும் வீரனும் வீணைமீட்டி சங்கீத வாத்தியம்பாடிவறக்கண்டு விசையசொக்கலிங்கனுக்கர் யேதன்று சொல்கிருர்.

சொக்கலிங்கர் கவி.

முழங்கியவீணைவாத்தியம் மொழிதனைக்கேட்டுமன்னன்
பழம்பொருள்வேதசாஸ்த்திமெ படித்தவரினனுறொன்று
வினங்கவே அவனைக்கூட்டி விந்தையாசமுகந்தன்னில்
வழங்கியேவீணைவாசிக்கும் வறனையுமழைத்திடாயே.

வீரன் தரு ஓரடி.

வந்திடஅழைத்தசேதுஅய்யா நீ
வண்மையையுரைக்கவேண்டுமெய்யா

சொக்கலிங்கர் தரு.

அழைத்தவிதமுஞ்சொல்வேன்பாலா யெனக்கு
அரியயுன் னூரும்பேரும்சிலா

வீரன் தரு.

ஊரோவடக்கேதுலைசொன்னேன் நான்
உந்தனிடவாக்கால்வந்தேன்முன்னே

சொக்கலிங்கர் தரு.

வந்ததுசந்தோஷந்தான்பாலா என்
வார்த்தையைநீஅரியக்கேளா

வீரன் கவி.

கேளாநீயென்றுரைத்த கீர்த்தியோடுலகமெல்லாம்
ஆளவும்நீதியுண்டு அரசனேசொல்லக்கேளீர்
நாளையில்யென்னைவேண்டி நலமுடனழைத்தசேதி
மீளவேஎந்தனுக்கு வேந்தனேயுரைசெய்வீரே.

சொக்கலிங்கர் தரு.

வேண்டிபழைத்தவிதம் கேளாய் கேளாய்
தாண்டிஇவ்விடம்வந்த பாலா பாலா

வீரன் தரு.

அரியாசிறுவனும் அய்யா அய்யா
பரியாசம்செய்யவேண்டாம் மெய்யாதுய்யா

சொக்கலிங்கர் தரு.

ஆக்கானபரியாசம் செய்குவேனோ
பாகாஇக்கோட்டைகாவல் புரியதானோ

வீரன் தரு.

காவல்புரியசொன்னீர் என்னைக்காரும்
மேவல்இருக்கஆயிரம் பொன்னைத்தாரும்

சொக்கலிங்கர் கவி.

காருமென்றுரைக்கக்கேட்டு கருணையால்னுக்கர்தானும்
வேறொன்றுங்கவலைவேண்டாம் வீரனேயுமக்கிப்போது
தாரனேஆயிரப்பொன் சம்பளமாகவாங்கி
தீரனேயெனதுக்கோட்டை சீக்கிரம்காவல்செய்வாய்

வீரன் கவி.

சொக்கலிங்கேந்திரனர் சொன்னசொர்ப்படிகாவல்போக
சிக்கனமாயெழுந்து சீக்கிரம்நாலுப்பக்கம்
பச்குவகுதிரைமீது பாங்குடன்சவாரிசெய்து
மிக்கவேவிசையசொக்க லிங்கரே இருப்பேனைய்யா.

ஷை வீரன் கவி.

இந்தபடிசொக்கலிங்கர் வார்த்தைதன்னை
இபலானவீரமுத்து காதில்கொண்டு
விந்தையுடன்வேதமுறை வாயால்சொல்லி
மெல்லியாள் பொம்மியுடன்பரியிலேறி
கொந்தமுடன்வில்வாளும் கடகந்தன்ன
கூச்சலிட்டுயாவருமே நடுக்கங்கொள்ள

சிந்தைமகிழ்ந்திருச்சிறுப்பள்ளி வீதியெங்கும்
செயமுடனேஉலாத்திவரப் புறப்பட்டானே.

சிந்து தரு.

காலையிலெழுந்திருந்து துரைமுத்து
காவேரியாற்றிலே ஸ்நானம்செய்தான்
ஆலமுண்டோனைநினைந்து நல்ல
ஆடைப்பணி ரூ மிகதரித்து
சிங்காரமுடனே பரியேறி உச்சிதமா
தெருவெங்குமசுற்றியே சவாரிவர
காதலுள்ளப்பெண்களெல்லாம் வீரனை
கண்டுமையல்பெருகிடவே காதலுமாகி
மருவீதிவரும்போது இல்லமுமாதர்
மங்கையவனழகைப்பார்க்கப் பெண்களாலாகா
இப்படிச்சுவீரதுரையும் வேந்தரிட
இன்பமுடசமுகத்தில் வந்துமேகினான் (தத்தனம்)

வீரன் கவி.

காசினியோரால்காண கடினமாவீதியெங்கும்
தேசமேசெயக்கொண்டாட திரளானசேனைசூழ
யீசனார்செயலால்வந்த இபலானவீரமுத்து
வாசம்மாமதுரைசெல்ல மகிழ்விபாபுறப்பட்டானே.

பொது வசனம்;

இவ்விதமாக வீரனும் பொம்மியும் ஆநமாதம் நல் கழித்து திருச்சிறுப பள்ளியைவிடடு மதுரைக்குச்செலல இப்பால் அந்த மதுரையை ஆளபபட்ட திருமலைநாககன சொலுவுக்கு வருகிறான்.

திருமலைநாக்கன் கவி.

நாள்தோறும்சொக்கர்பாதம் நலமுடன்பணிந்துபோற்றி
வேளையில்மூன்றுகாலம் மிக்கவேபூசைசெய்யும்
தாளடிமந்திரிமார்கள் தழுவிடதிருமலைநாக்கன்
வாளேந்திகொலுமுன்பாக வருகின்றான்கிரையத்தானே.

தரு.

ஜெகமெக்கும்புகழ்பெற்ற அகமதில்தினமொற்ற
திருமலைனாக்கர்வந்தார் சிவனார்பாதம்
குருவெனுமேகொண்டார்

தகதகவெனஒளி சந்திரகாரமுந்துன்ன

(கருள்) தாவுர்பூச்சக்கிர குடையபதுமின்ன
மேவுங்கீர்த்தியால் வேந்தரும்பனன (ஜெக)

ஆலவட்டங்கள்போடவே இருபுரமாதற்
ஜாலஞ்செய்துமேகாடவே

காலனைக்காலாலுதைத்த காளகண்டையன்தன்னை

(கருள்) கர்த்தன்திருவடி பத்தியாமனதினில்
சத்திமீனாம்பாள் புத்தியில்நினைத்து (ஜெக)

சரிகை அங்கியுந்தன்னவே பளபளென்று
சரிகமபதமென்னவே

பெருகியபுசகீர்த்தி பேருலகெங்கும்வாழ்த்தி

(கருள்) பேற்பிலராசர்கள் வந்தடிசூழ
சார்பூடிமன்னர் அரிகினில்தாழ (ஜெக)

மதுரைபதியில்தினமும் மார்க்கந்தவறு
அதிபதிபெற்றோர்களையும்

நதிவளர்நாட்டினில் நான்தவறுநகப்பம்

(சருள்) நாடியநமக்கும் ஆரினில்ஒன்று
தேடியபாமன் பதமதைக்கண்டு (ஜெக)

கவி.

வாடிவந்தேவல்செய்யும் நலமுள்ளகட்டியக்கார
தேடியசிவனார்பாதம் தினம்தினம்தொழுதுபோற்றி
கூடியஅரசசெல்லாம் கொலுவுக்குவருகின்றார
நீடியவெந்தனுக்கு நிலமையை அறிந்துரைப்பீர்.

பொது வசனம்.

இவ்விதமாக திருமலைநாக்கன் கொலுவிருக்க இப்பால் வீரமுத்தையப்பனும் பொம்மியாளும் மதுரைவீதிக்கு சென்று, ஏதென்று சொல்லுகிறார்.

வீரன் தரு.

தொட்டியகுலத்தில்வந்த இஷ்டர்சறவேவந்த
பாமனே சொல்லுவேனே
கட்டளையுந்தவறிவிட்டோம் திருச்சினாப்பள்ளி
வேனே மனக்கலங்குதானே

(சருள்) இன்பமதாக அன்புகற்கிளியே
சம்பிரமதேக வந்திடும்ஒளியே (தொட்டி)

பொம்மி தரு.

மனதில்கவலையில்லை வந்தோமனைகதொல்லை
மாரா யெந்தனவீரா
தனமும் அழகுடைய சந்திரனுக்குஒத்த
தாரா மைய்யல்தீரா
(சருள்) சந்திரன் ஒளி சந்திரகெப்பீரா
கந்தனற்குழலாள் காந்தியுமாரா (மனதில்)

வீரன் தரு.

மைய்பல்தருகவந்த மாரன்பொம்மணுக்கன்
மாதே யெந்தனகோதே
அய்யமில்லாமல்நாமும் ஆசைமதுரைவீதி
அடர்ந்தோம் வந்துசேர்ந்தோம்
(சருள்) ஆகாபிதுவென்ன இலாக்கியம்பாரடி
ஓக்கமெக்கிது யோக்கியமகாரடி (மைய்யல்)

பொம்மி தரு.

யெந்தனைதாய்தகப்பனுக் இன்பமாய்நான்பிரக்து
யெதிவேனும் பார்த்ததரியேனே
சுந்திரனேயுஞ்சனுல் தோகையும்இவ்வேடிக்கைகள்
தோற்றவே கண்ணாலபார்தேனே
(சருள்) சொகுசுள்ளமாறு நீர ஒய்யாரா
மகிமையாலஙெசலவோம் வாரும்பிரகபாதா (யெந்தன்)

வீரன் கவி.

மடற்கொடிமானேதேனே மங்கைநல்பொம்மியாளே
இடம்பெறுமதுரைவீதி தேவியேவந்துபார்த்தோம்
அடறயேநாமுமகெடி ஆசையாய்யிருவருந்தான்
நடமயிலரசேசற்று நாமிங்கிருக்கலாமே.

திருமலைனுக்கன் கவி.

வாருங்களமச்சமாரே மதிளோரம்சிருவனுரே
கூருங்கள இன்னுனென்ற கூப்பிட்டு அழைகதுகொண்டு
சேருங்களயெந்தன்முன்னே சேதியொன்றுரைக்கவேணும்
தீருங்கள்பகிலெனக்கு சீக்கிரமரியத்தானே.

வீரன் தரு.

அரியாகப்பாலன் தன்னை — அழைத்ததேதையப்பா
என்னை — அழைகததேதையப்பா
நீபரிவாகயுரைக்கவேண்டும் — பண்பாகஒதையப்பா

திருமலைனுக்கன் தரு.

ஒருவேனுனுந்தனுக்கு — உண்மையரிய
பாலா — உண்மையரிய
நீதொன்றுமில்லையில்லை — செப்புவேன்தெரிய

வீரன் தரு.

செப்புமொழிவசனந்தன்னை — நீருக்கிருமே
அய்யா — நீருந்திருமே
நீஒப்-றவாயெனக்குச்சொல்லிக் — காருங்காருமே

திருமலைனுக்கன் தரு.

கார்க்கத்தடைசளில்லை — காவலாகுவாய்
கோட்டைக்கு — காவலாகுவாய்
நீபோக்கிரித்தனமில்லை — நீயுமபோகுவாய்

வீரன் கவி.

காவல்செய்கோட்டைக்காக கடினமாபோகச்சொன்னீர்
ஆவலாநானுஞ்செல்ல அரியாதவன்ஒன்றுரைப்பேன்
யேவலாஓமாததிாக்கு பெணககாயிம்பொனகந்தால்
நீவதைசொன்னுபோலும நிஷ்சயமகாவலகார்பபேனே.

திருமலைனுக்கன் கவி.

நீகூமென்னைக்கேட்ட நி ணனபாலாபானும்
தக்ஷன ஆயிரமபொன் தருவேன்றனைககுதனுககு

இக்ஷணம்வந்துகாவல் இடறதசெய்திடாமல்
பக்ஷமாசென்று அங்கு பாலனேகாததிடாயே.

வீரன் சுந்தார்த்தம்.

திருமலைநாய்க்கன் சொன்னசேதி கேட்டெழுந்தவீரன்
அருமையாளபொம்மியாளும் அன்புடனமனமகிழ்ந்து
புரவியின்மீதிலேறி புறப்பட்டுமதுரைவீதி
பெருமைவரபார்த்தவாக பேதையோடுரைக்கின்றானே.

வீரன் தரு.

கதிரோனை கண்காணுவீரன்
காந்திவடிவமென்ன காலையிலெழுந்து
அதிவேகமாபுரவியேறி நல்ல
அழகானபொம்மியுடன் வேசமதாமீசி
பேழகதக்கோட்டைகண்டான் அந்த
இபலானமதுரையின விதிதனையுண்டான்
வாழுமடாவீதிசுததிவந்தான் வெகு
வஞ்சியர்களிருபுறமும் வருசஇன்பம்கொண்டான்
மாடப்புறுமயில்சள்கொஞ்ச இந்த
வல்லிபொம்மியாளிட அழகதனைசெஞ்ச
திருமலைநாய்க்கனவர்சொன்ன அவர்
செய்திடுபடைத்திரவு போலதுவுமுனனே
கருமலைப்போலேமன்வந்தால் பெணணே
கண்டுபயந்துமே வாட்டிடுவேன்சிநதாய் (கதிரோ)

பொது வசனம்,

இவ்விதமாக திருமலைநாய்க்கன் உததரவுப்படி வீரைய்யன் கோட்டைக் காவலாகி வீதிஉலாததிவருகையில மதுரைமீனும்பாள் சனிதானத்தில்தெய்வாதீனமாகவந்த வெள்ளைநாயகியமமனகொலுவுக்குவருவது.

வெள்ளைநாயகி கவி.

மதுரைமீனும்பாளுக்கு மங்கையாள்தினமும்நல்ல
கதிரமலரெடுத்துக்கொண்டு கனனியாள்பூசைசெய்யும்
அதிவிதப் பணிசெய்யாசி அழகுபூங்காவுக்கேக
விதிமுறையுரிந்தவெள்ளை நாயகிவருகின்றானே,

தரு.

வித்தைப்பியாசந்தன்னில்
வெள்ளைநாயகியும்வந்தாள்
வெள்ளைநாயகியும்வந்தாள்

முத்துங்கலைதெரித்த
(சுருள்) மோதுமுகத்தில்
சீதளகளபம்

நாதகிசுமுழ்ங்க
கருமலர்வாடைகள்
(சுருள்) நாசுரஞ்சித
பாகுசேர்மொழி

ஆடைப்பரிமளிக்க
அஞ்சனஞ்சலாசவே
(சுருள்) அருளையபிருபுசம்
பெருமையதாகவே

ஆசையாதினந்தினம்
அன்பாமீறும்பாளை
(சுருள்) அங்கமுங்குளிர
திலகனினிச்சனா

சந்தமுலையசித்த
கல்லஅதிவிதருபி

சத்துஞ்சிக்தாணந்த
மஞ்சளைப்பூசி
தெருவைவிஸ்வாசி (வித்தை)

மாதர்வந்துயிணங்க
தெரிவையாசனிணங்க
மோயிவளென்ன
தினந்தினம்பன்ன (வித்தை)

சாடைக்கண்கள்சனிக்க
கஞ்சமலர்முகத்தாள்
கவரிசள்வீச
வந்துமேபேச (வித்தை)

பூசைபுரியுமனம்
இன்பம்புரியும்வேளை
சங்கையில்லாமலே
திருவடிமேலே (வித்தை)

வெள்ளைநாயகி கவி.

பழுதாரவார்த்தைசொல்லும் பாங்கியன் தாதிமாரே
செழுமதியோனுக்கடி செங்கதிர்வாராமுன்னம்
வழுவில்லாதமுன்கூடி நந்தவனத்தனிலிப்போயேகி
பொழுதமாராமுன்மலர்கள் போயினும்மெடுப்போம்வாரீர்.

தரு.

வஞ்சியரோதாமுன்கூடி கொஞ்சியேவிளையாடி
மலரெடுக்கவேநீவாடி யெந்தன்சேடியே
மலரெடுக்கவேநீவாடி.

வாசமலரெடுத்து பூசஞ்சரந்தொடுத்து
நேசமுடனே அடுத்து அரும்பெடுத்து
நேசமுடனே அடுத்து

மந்தாரபுஷ்பங்கள்மாலை மகிழ்வாயெடுப்பேன்காலை
பந்தாடிசெண்டுகளாய்வாலை பறந்தோடினாலே
பந்தாடிசெண்டுகளாய்வாலை

வீசுஞ்சூரியகாந்தி தேசசுவாணஒத்தி
நாசஞ்செய்திடாமல்யேந்தி தினமுங்காந்தி
நாசஞ்செய்திடாமலயேந்தி

பச்சைப்புறாமயில்கள் பாடிதெந்தினங்குயில்கள்
இச்சைக்கொள்ளவேஒயில்கள் காணவயல்கள்
இச்சைக்கொள்ளவேஒயில்கள்

மீனைப்பாருக்குவாசம் யேனோயில்லையோநேசம்
விடுதிக்கிசென்றிடப்பிரகாசம் காந்தியினவாசம்
விடுதிக்கிசென்றிடப்பிரகாசம் (வஞ்சியரோ)

கவி.

பஞ்சாத்தினைப்போலத்தபாங்கியே சொல்லக்கேளாம்
மிஞ்சியேவனதனில்வந்து வெகுவிதமலர்கள்கொய்தோம்
சஞ்சலமில்லாமலந்த வைதயால்மீனுமபாருக்கு
வஞ்சியேபூசைசெய்ய மனைதனைவெகுவேமே.

வீரன் கவி.

மடமயில்வெள்ளைமாது மலர்பரித்துக்கொண்டு
நடமயில்மனைபால்செல்ல நங்கையைப்பார்த்தநல்ல
துடிவழகானவீரன் தோன்றலுக்குருமையான
வெடியுமுன்னிவளைக்ககூடி வேண்டுமென்றுரைக்கின்றானே.

தரு.

இந்தநந்தவனந்தனிலே யிருக்குமாதேசாணரியேன்
என்னைக்கூடுவாளோதெரியேன் இவள்குணமரியேன்
என்னைக்கூடுவாளோதெரியேன்

சந்திரனுமயங்குவானே கந்தமலரெடுக்குமானே
வந்துயென்னைக்கூடும்நீதானே மங்கைபெண்மானே
வந்துயென்னைக்கூடும்நீதானே

தேசங்கள்தானரிய பூசங்கெந்தமுமுரிய
வாசனைமிகமணக்குதே உடல்கடுக்குதே
வாசனைமிகமணக்குதே

காந்திடன்சோதிமின்னல் மாந்துளிர்யிவளோகன்னல்
காமன்கணைவாட்டுறான் சன்னல்காலுகைபின்னல்
காமன்கணைவாட்டுறான்

முத்துதிரும்வாயினுலே மொழிவேண்டுங்கேள்பெண்ணுளே
சித்தினியோதெரியேன்பின்னுலே செங்கையினுளே
சித்தினியோதெரியேன்பின்னுலே (சித்தி)

வீரன் குருங் கவி.

மாதேயென்னுல் வர்மமோயுனக்கு
காதலாவந்தேன் கண்டுன்னைநாளாய்
பேதஞ்செய்யாதே பெண்மணியாளே
ஆதலால்நீயும் அணைகுவாய்சற்றே.

வெள்ளைநாயகி தரு.

பூசைக்குமலரெடுக்க பேய்போல்வந்துதடுக்க
புத்தியுனக்கில்லையோராசனே யென்னை
நத்துவதுபழகோராசனே (பூசை)

வீரன் தரு.

அழகல்லவென்றுசொல்லும் அன்னமேமுன்னேநில்லும்
பழகிடவேணுமடிபெண்மணி கூடியேலீலை
தழுவினுல்சொந்தமாகும்கண்மணி (அழகல்)

வெள்ளைநாக்கன் தரு.

தழுவிடவேணுமென்று தாருமாருகவின்று
வழுவில்லாவார்த்தைப்பேசுருய் சொந்தக்காரனே
இப்பொழுதிலேநீயுமவீசுருய் (தழுவிட)

வீரன் தரு.

சொந்தக்காரனென்றுரைக்கும் கந்தனர்க்குழலினுளே
வந்தவிதம்சொல்வேன்கேளடி பொம்மியும்நானும்
அந்தசேதிகண்டுதாளடி (சொந்த)

வெள்ளைநாயகி கவி.

தாளவும்வசமுமில்லை தருதலையாகப்பேசி
மீளலேபெந்தனுலே விருதாவாமடியப்போருய்

நாளையில்மீனும்பாலும் நடந்திடும்சேதிகண்டால்
வேளையில்கொள்வாலுன்னை வேந்தனேநடந்திடாயே

வீரன் ஓரடி தரு.

நடந்திடநான்வந்தேனே யெந்தன்
தங்கைவெள்ளைநாயகி

வெளளைநாயகி தரு.

நடந்துஅப்புறம்போவீர் இந்த
துஷ்டத்தனத்தைவிட்டு

வீரன் தரு.

துஷ்டத்தனங்களல்ல பெண்ணே
கஷ்டங்கள்வாராதடி

வெள்ளைநாயகி தரு.

கஷ்டங்கள்வந்தாலும் ஒரு
நஷ்டங்கள்வாராது

வீரன் கந்தார்த்தம்

இத்தனைமோடியேனோ யிளங்கைதயினாளே வெள்ளை
சித்தினியென்றுயுன்னால் சிவனும்போனாலுந்தான்
வைத்திமேபுரவியின்மேல் மாதெனும்பொம்மியோடு
பத்தினிதன்னைத்தூக்கி

தரு.

பரிவாகநடந்தானே வீரதுரை
புரவியின்மேல்துடர்ந்தானே

கரிகியழுதாலும் கண்ணீர்கள்விட்டாலும்
திருமலைநாக்கன்சொல் தட்டிநடந்தானே (பரிவாக)

பொது வசனம்.

இவ்விதமாக வெள்ளைநாயகியை வீரமுத்து சிறையெடுத்த சங்கதி திருமலைநாக்கனறிந்து மதுரைமீனாம்பாளுக்குதெரிவிக்க மீனாம்பாள் உத்திரவுபடி வீரைய்யனை மாருகால் மாருகையி வாங்கிவிடச்சொல்ல அதேபிரகாரம் வீரனை மாருகையி மாருகால் வாங்கிவிட மருபடியும் சங்கதிதெரிந்து கால்கைவளரும்படிசெய்ய வீரனறிந்து நாம் இந்த சடலத்தை இப்பூமியில் வைக்கப்படாதென்று அக்கினி மூட்டி பொம்மியும் வெள்ளைநாயகியும் வீரனும் அக்கினியில் விழுந்து இரந்துபோயிவிட மருபடியும் அவர்கள் மூன்றுபேர் போல படம் பிடித்துவைத்து இனிமுதல் இந்தமதுரையில் முன்காவலாக வைத்தமைத்தார். சுபம். சுபம். சுபம்.

மதுரைவீரய்யன் நாடகம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

ரிஜிஸ்டர்செய்து அச்சிட்ட

புத்தக விளம்பரம்.

ஈஸ்வரகாடிசோதிடம் சப்தகாண்டம்	7	0	0
அகஸ்தியர் தேவாரத்திரட்டு	1	8	0
சர்வார்த்த சிற்பசிந்தாமணி	1	8	0
சோதிடகோட்சாரசிந்தாமணி	1	0	0
இராமதேவர்சோதிடமென்னும் ஆண் பெண் இரேகைசாஸ்திரம் மூலமும்-உரையும்	1	0	0
கௌரிமோக்ஷநாடகம்	0	5	0
பழியஞ்சியநாடகம்	0	5	0
சத்தியபாமாகெர்வபங்கநாடகம்	0	5	0
அனுசூய கற்புநாடகம்	0	5	0
மணிக்கிரீபன் ஜலக்கிரீடைநாடகம்	0	4	0
அக்குமாதேவி சரித்திரநாடகம்	0	5	0
தர்மர்பட்டாபிஷேகநாடகம்	0	6	0
யயாதிமகாராஜன்நாடகம்	0	6	0
கூலிக்கிதாலிகட்டியநாடகம்	0	5	0
நாரதர்பங்கநாடகம்	0	5	0
௸ இரண்டாம்பாகம்	0	5	0
துருவாசர் கெர்வபங்கநாடகம்	0	5	0
மதுரைவீரைய்யன் நாடகம்	0	5	0
பார்வதி கலியாணநாடகம்	0	5	0
ஜலந்திராசுரசம்மாரநாடகம்	0	6	0
மணிமாலன்சண்டை நாடகம்	0	5	0
இலக்ஷ்மணாதேவி மாலையிடுநாடகம்	0	5	0
ஆதிநாடகம்	0	8	0
அருணகிரிநாதர் சரித்திரம்	0	8	0
திருவண்ணாமலை திருவூடல்சரித்திரம்	0	5	0
வன்னியவல்லாளராஜன் பூர்வசரித்திரம்	0	1	0
மலையாள மாந்திரீக அரிச்சுவடி	0	4	0

விலாசம்:—

இப்படிக்கு,

ம. கி. முருகேச முதலியார்

புஸ்தக வியாபாரம், கூடலூர், ஓல்டவுன்.